உ

பரமபதி துணை.

மகாமகத்துவம் பொருந்திய

அகத்தியர்

திருவாய் மலர்ந்தருளிய

பூரண சூஸ்திரம் 216.

ஜி. இராமசாமிக் கோன்

இ. ராம. குருசாமிக்கோனார் சன்

புத்தகசாலை புதுமண்டபம் மதுரை.

பதிப்புரிமை. 1956 விலை ரூ 1—0—0

5. 93

உ

பரமபதி துணை.

அகஸ்திய முனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

பூரணசூஸ்திரம் 216.

இஃது

மதுரை யானைக்கல் தெரு வித்வான்

மு. குழந்தைவேலுப் பிள்ளை யவர்கள்

ஓலையேட்டுப் பிரதியின்படி

மதுரை புதுமண்டபம், புஸ்தகஷாப்,

இ. ராம.

குருசாமிக் கோனர்

அவர்களாற் றமது

மதுரை வடக்குமாசிவீதி குருசாமிக்கோனர் தெரு

ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

இதன் விலை 1931 0—12—0

S.93

உ

கடவுள் துணை.

அகஸ்திய முனிவர் அருளிச்செய்த

பூரண சூஸ்திரம் 216.

காப்பு.

ஓடியதோர் தந்திமுகன் றனைப்பணிந்து
உரைத்திடுவேன் பூரணசூஸ்திரத்தையானுந்
தேடியதோர் மந்திரத்தா லஷ்டசித்தி
திறமாக வுரைக்கின்றேன் யோகியர்க்குக்
கூடியதோர் கந்தமதைச் சிதம்பரத்தில்
குணமான காலதனைக் கூட்டிமூட்டி
ஆடியதோர் ஐம்புலனை மூலத்துள்ளே
அமைத்திட்ட மூலகண பதியேகாப்பு.

ஒன்றான பூரணமு மாறுதார
முரைத்ததற்கு மேலாறுந் தொண்ணூற்றாறும்
பண்டான தீட்சைபதி னென்றும்ரெட்டி
பத்துடனே முப்பத்துரெண்டுதீட்சை
உண்டான சமாதிகற்பம் வாசிநேர்மை
யுறைப்பான சிவயோகம் பிராணயந்தான்
நன்றான வாதத்தின் தீட்சையோடு
நலமான சவுக்காரத் திறவுகோலே. (1)

திறவுகோல் முன்னுரைத்த நூல்கட்கெல்லாம்
செய்பாகங் கைபாகந் தீட்சைபாகம்
அறைகிறேன் சரிகையொடு கிரிகைமார்க்கம்
அப்பனே முனிசித்தர் நூல்கட்கெல்லா
மறைபுகழாய்ச் சொன்னதெல்லாம் வெளியாய்ப்பாடி
மாட்டினேன்பூரண சூஸ்திரத்திற்காணும்
இறையளவுந் தப்பில்லை மறைப்போவில்லை
இருநூற்றுப் பதினாறு இந்நூல்காணே. (2)

நூல்.

காணப்பா விந்நூல்போ லொருநூலில்லை
காசினியிலிந்நூலைக் கண்ணிற்காட்டார்
பூணப்பாவைம்பதுக்குள் பூசீர்வித்தை
பூட்டினேன் வயித்தியத்திற் புகழோமெத்த
நாணப்பா வொருநூற்று வைம்பதுக்குள்
நலமான சூட்சத்தை நாட்டினேன்பார்
பேணப்பா முந்நூற்றில் காமதாமம்
பேசினேன் தீட்சைவிதி யிருநூற்றுள்ளே. (3)

உள்ளான பூசைவிதி யிருநூறுக்கும்
உத்தமனே முந்நூறிற் செந்தூரங்கள்
விள்ளவே ஆயிரத்தி யிருநூற்றுள்ளே
விளங்கினேன் கருவெல்லாம் வெளியாய்ப்போச்சு
எள்ளளவுந் தப்பில்லை மறைப்போவில்லை
யெய்துமென்ற கருவெல்லா மிதிலேயெய்துங்
கள்ளடா கள்ளருக்கு விந்தநூலைக்
காட்டாதே பன்னிரண்டுங் காத்தாலீயே. (4)

ஆருதாரம்.

ஈவதுதானருக்கு சிவயோகிக்கு
இகத்திலுள்ள மானிடர்க்கு ஈய்ந்தாயானல்
நோய்மிகுந்து சாவாரோ சொன்னேன்மைந்தா
நுண்மையாய் மனதில்வைத்து நுணுக்கங்கண்டு
தாய்பதத்தைப் பூசித்துக் கற்பங்கொண்டு
சமாதிக்கு ளிருந்துரைத்துத் தலைவணகி
நீமலைமேலேறிவிடு லோகத்துள்ளே
நின்றுக்காற் கொல்லுமடா நிசஞ்சொன்னேமே. (5)

மூலாதாரம்

நிசமான பூரணத்தைச் சொல்லக்கேளு
நின்மலர்த்தா யென்றனுக்கு வுபதேசித்தாள்
வசமான அடிமூலங் கணேசர்கோயில்
வட்டமா மைங்கோணந் திரிகோணத்தில்

எசமான கணேசரொடு வல்லபையுங்கூட்டி
யிருக்குமடா ஓம் ஈம் கிலீயுமென்று
வசமான அங்சிவ கணபதி தேவாவென்று
வாழ்த்தடா குண்டலித்தாய் வணங்குந்தானே. (6)

வணங்குவதுக் கிப்படிநீ சக்கரத்தை
வரிசையாய்க் கீறியே யட்சரங்கள்
பிணங்காமல் ஈங்காரம் நடுவேயிட்டு
பேரான கோணமைந்தி லைந்துமிட்டு
இணங்கவே தூபனை வேத்யத்தோடு
இலச்சமுரு வேற்றிடக்குண் டலிதானென்றுங்
கணமான கணபதிதான் பிரகாசிக்குங்
கயிலாயப் பரகதியைக் காட்டுந்தானே. (7)

சுவாதிஷ்டானம்

காட்டுவது நாற்கோண மதன்மேலப்பா
கருதுவது விருகோண முக்கோணவட்டம்
பூட்டுவது பிரமனொடு சரஸ்வதியுங்கேளு
புகழுவேன் நங்-மங்-ஸ்ரீம்-ஐங் அங்-பிரமதேவாவென்று
கூட்டுவது லட்சமுரு வேற்றுதற்குக்
குறிசொல்வேன் நாற்கோணம் நாலெழுத்துமிட்டு
நீட்டுவது விந்துவிலே அங்கென்றிட்டு
நிலையாகப் பூசிக்க முத்தியாமே. (8)

மணிபூரகம்

முத்தியாம் பிரைநடுவே முக்கோணமிட்டு
மூர்க்கமாய் மகாரமொடு உகாரமிட்டு
பத்தியாம் ஓங்காரம் ஸ்ரீங்காரங்கூட்டிப்
பச்சைவர்ண மூர்த்தியென்றே பகர்ந்துசேவி
சத்தியா மச்சரங்கள் நடுவேயிட்டு
சாற்றுவாய் லட்சமுருத் தானேயாகில்
வெற்றியாங் குண்டலியும் மேலேயேறும்
வேதாந்த பூரணத்தில் சேர்க்குந்தானே. (9)

அனுகதம்.

சேர்க்கின்ற முக்கோண ருத்திரமூர்த்தி
திகழான அறுகோண முன்னேயிட்டு
ஆர்க்கின்ற விந்துவதி னடுவேயிட்டு
அளவான சிகாரமொடு மகாரமிட்டு
பார்க்கின்ற ஸ்ரீங்கார ஹங்காரந்தான்
பகர்கின்ற வகாரமொடு கிலீயுங்கூட்டி
தீர்க்கின்ற ருத்திரத் தேவாவென்று
செபிக்கவே வாசியது யேறும்பாரே. (10)

விசுத்தி.

பாரடா லட்சமுரு வேறிற்றானால்
பகருமருகோணமதில் விந்துவிட்டுச்
சேரடா வகாரமொடு ஓங்காரந்தான்
சிறப்பான ஸ்ரீங்காரஞ் சிவாயநமாவென்று
தீரடாமயேசுவர தேவாவென்று
செபித்திடுவாய் லட்சமுரு திறமாய்த்தானே
ஆரடா வுனக்கிடு வாசிசித்து
யாரெழுத்து மறுகோணத் தறைந்திட்டேனே. (11)

ஆக்கினை.

அறைந்திட்ட மூன்றெழுத்து நடுவேபோடு
அருளான சதாசிவத்தி னருளைப்பாரு
விரைந்திட்ட விந்துவிட்டு நடுவேகேளு
விதமானவைங்கோண முக்கோணந்தான்
உறைந்திட்ட சோடசந்தா னைந்துங்கூட்டி
யுறவான அங்கிஷ ஐம் ஓம் என்று
பறைந்திட்ட சதாசிவதே வாயாவென்று
பகருவே னிலட்சமுரு பரிந்துநோக்கே (12)

நோக்கடா வைங்கோண மைந்துமிட்டு
நுணுக்கமடா விந்துவுக்குள் முக்கோணத்தில்
ஆக்கடா அம் அங்கிஷ ஐம் ஓமென்று
அப்பனே ஸ்ரீங்கார மிட்டுச்சேவி

மூக்கடா பாயாது வாசிதானு
முக்யமடா மேல்மூலத் தூணிப்பாரு
நாக்கடர் அமுர்தமது கீழேபாயும்
நலமான கீழாறு நவின்றிட்டேனே. (13)

மேலாதாரம்—அக்கினிமண்டலம்.

ஏனென்ற வாதார மேலேயாறு
மியம்புகிறே னன்றாக வியல்பாய்த்தானே
தேனென்ற சதர்சிவத்தின் மேலேகேளு
தீயானமண்டலந்தான் திரிகோணமாகி
வானென்ற மண்டலத்தில் திரிகோணத்துள்
வைத்திடுவா யகாரமொடு சவ்வுந்தானே
கானென்ற மலமறுக்கு மக்கினிமண்டலத்திற்
கண்டிப்பு வற்றுவிடுங் கனலிற்றானே. (14)

கனலிலே வாயுவந்து புக்கிற்றானற்
கண்திறந்து வமுர்தமது கணிந்துபாயும்
புனலான வமுர்தமுண்டால் காயமீறும்
போச்சுதடா நரைதிரையும் புதுமையாச்சு
அனலிலே வெந்தவொரு பாண்டந்தானு
மசையுமோ நீருக்கு வதுபோலப்பா
நினைவிலே யித்தியான மூட்டுமூட்டு
நிச்சயமாய்ச் சமாதிக்குள் நிலைக்குந்தானே (15)

சூரியமண்டலம்.

நிலையான வழற்குளமண் டலத்துக்கப்பால்
நேரான சூரியமண் டலத்தைக்கேளு
சிலையான விந்துவடா உகாரமிட்டு
செபித்திடுவாய் சூரியனை கோடிகாந்தி
மலையாமல் வாயுவதிற் சேர்ந்ததானல்
மைந்தனே யுன்னுடலிற் பிரகாசத்தைக்
கலையான சூரியனைப் போலாந்தேகங்
கல்மிஷங்க ளில்லையில்லை காணுகாணே. (16)

சந்திரமண்டலம்.

வாணுகின்ற சூரியமண் டலத்துக்கப்பால்
கலைமதியஞ் சந்திரமண் டலத்தைக்கேளு
தோணுகின்ற சோதியடா மௌனவீடு
சொல்லரிது சொல்லுகிறேன் அங்கென்றாணு
பேணியே செபித்திடவே சோதிகோடி
பிரகாச மாயிடுங்காண் பெருமைபேசார்
ஆணுவங்க ளற்றதடா அரூப ரூபம்
அக்ஷரங்க ளற்றவிட மறையக்கேளே. (17)

கேளப்பா ஓங்கார மதன்மேல் நிற்குங்
கெடியான வைந்துமூன் றெழுத்துமீதில்
நாளப்பா பஞ்சகர்த்தா ளைவரீதில்
நலமான ஆன்மா ஜீவகளையுமீதில்
வேளப்பா ஓமென்று தியானஞ்செய்ய
வித்தான பிறவியெல்லா மற்றுப்போச்சு
சூளப்பா பிறவியுமிவ் வளவேயாச்சு
துலங்கிநின்ற பூரணத்தைச் சொல்லப்போமோ. (18)

ஏகாட்சரம்.

போமென்ற பூரணமு மிதுவேயாச்சு
பூரணமாஞ் சூட்சத்தைப் புகழக்கேளு
தாமென்ற அகாரத்தில் உகாரமிட்டு
தனிந்துநின்ற ஓங்காரஞ் சுற்றிக்கட்டி
வாமென்ற மதின்கீழே மகாரமிட்டு
மகாரத்தின் மேலேறி அகாரத்துள்ளே
ஊமென்ற றீங்காரம் நடுவேயிட்டு
யுயரவே சூலமிட்டு சிங்கிவங்கே (19)

வங்கென்று இருபுறமும் வைத்தாயானல்
மைந்தனே சூட்சமது ஏகசூக்ஷ்ம்
பங்கென்ற பூரணமு மிதுவேயாச்சு
பகருகின்ற மந்திரமு மிதுவேயாச்சு

தங்குமே சடாட்சரமு மிதுவேயாச்சு
தருவான எட்டெழுத்து மிதுவேயாச்சு
அங்குபஞ் சாட்சரமு மிதுவேயாச்சு
ஆதியென்ற மூன்றெழுத்து மிதற்குள்ளாச்சே (20)

ஆச்சடா தசதீட்சை யிதனுக்குள்ளே
அண்டசரா சரங்களெல்லா மிதனுக்குள்ளே
பேச்சடாவொன் றுமில்லை யிதனையல்லோ
பெரியோர்க ளுரையாமல் மறைத்தாரையா
வாச்சடா ஐம்பூத மிதனுக்குள்ளே
மதியிரவி யானதுவு மிதனுக்குள்ளே
காச்சடா அண்டமொடு புவனமெல்லாங்
கலந்துநின்ற வத்துவிதங் கண்டுகொள்ளே. (21)

கண்டுகொள்ளு மிவ்வெழுத்தைக் கற்பமெட்டில்
கர்ணப்பா பதிற்றுடனே கர்மமாடுங்
கண்டுகொள்ளு மிவ்வெழுத்தை யாதாரத்தில்
கர்மமாந் தீவினைகள் காணுதோடும்
கண்டுகொள்ளு மிவ்வெழுத்தை யாதாரத்தில்
கட்டாக வைத்துடனே வாசியேறுங்
கண்டுகொள்ளு மிவ்வெழுத்தைப் பெரியோரெல்லாங்
கட்டினார் நூல்தோறுங் காணுதென்றே. (22)

காணுது ஆணுமல்ல பெண்ணுமல்ல
கருதிப்பா ரலியுமல்ல கருதிச்சொல்லைத்
தோணுது வருமொன்று மரூபாரூபங்
துலங்கிநின்ற பூரணத்தைச் சொல்லிவிட்டேன்
கோணுமல் நின்றவரே குருவைக்காண்பார்
குருக்காணு ரானைகண்ட குருடராகு
மாணுன ஆதார தீட்சையாறு
மப்புரத்தில் நின்றதொரு ஆறுஞ்சொன்னேன் (23)

ஆறாறு பன்னிரண்டு தலமுஞ்சொல்லி
யதில்நிற்கு மட்சரஞ்சக் கரமுஞ்சொல்லி
ஏறாத வாசியது ஏற்றஞ்சொல்லி
யேகாட்சர பூரணமு மெடுத்துக்காட்டி
கூறாத கருவையெல்லாங் கூறினேன்யான்
கூற்றனின்ற விடமிதுதான் குறித்துப்பாரு
தேறாத பேருக்குந் தேறுந்தேறுஞ்
சிவசிவா பூரணத்தின் திறந்தான்காணே. (24)

சிவதீட்சை பதினொன்றின் விபரம்

1-2-தீட்சை.

திறமான தீட்சையது வழியதாகச்
செப்புகிறேன் சிவதீட்சை பதினொன்றுந்தான்
கறவாதே கறந்திதொரு பால்போலப்பா
காசினியோர் பிழைக்கவென்று கருவைச்சொன்னேன்
மறவாதே நீகேளு அம் உம் சிம் வம் யம் ஓமென்று
வளர்த்துவாய் முதற்றீட்சை மருவிக்காணும்
நிறைவாக அவ்வும் மவ்வும் ஓம் நமசிவாயாவென்று
நிகழ்த்துவா யிரண்டான தீட்சைநேரே. (25)

3 4 தீட்சை.

நேரான மூன்றுக்குந் தீட்சைகேளு
நிச்சயமாய் உம் அம் சிவ சிவாயமென்று
வேரான ஓமென்று செபித்தாயானால்
வெற்றியடா மூன்றான தீட்சையாச்சு
பாராய்நீ நாலான தீட்சைகேளு
பகருவேன் சிவாயநம ஓம் ஐயமென்று
சீராகச் செபித்திடுவா யைந்தாம்தீட்சை
செப்புகிறே னன்றாகத் தெளிந்துகொள்ளே. (26)

5-6-7-தீட்சை.

தெளிவாக வைந்தான தீட்சைகேளு
சிவசிவா அவ்வம் உவ்வும் சவ்வும் ஓம்என்று
நளினமா யாறான தீட்சைகேளு
நவிலுகிறேன் மவ்வும் உவ்வும் நமசிவாயா

குளிவாக ஓம்என்று செபித்தாயானால்
கூறுவேன் ஏழான தீட்சைமார்க்கம்
எளிதாக கிலிம்நமசிவாய அவ்வும் ஓமென்றே
யேற்றுவா யெட்டான தீட்சையெண்ணே. (27)

8-9-தீட்சை.

எண்ணவே ஓம்ஐயும் சிவஅங்கிஷாயா
யென்றுதான் செபித்திடுவா யெட்டாந்தீட்சை
பண்ணவே யொன்பதாந் தீட்சைகேளு
பரிவானசிவாயநம அம் உம் ஓமென்று
உண்ணியே யோதிடவே பத்தாந்தீட்சை
யுரைத்திடுவாய் பதினொன்றுந் தீட்சையோத
நண்ணவே முன்மவுனம் ஏகதீட்சை
நாட்டினேன் பூரணத்தை நயந்துபாரே. (28)

ஆதாரம் பன்னிரேண்டின் தீட்சைவிபரம்.

பாரப்பா தீட்சையது பதினொன்றுந்தான்
பரிவான ஆதாரம் பனிரெண்டுக்கும்
நேரப்பா வொவ்வொன்றுக் கொன்றேதீட்சை
நிறுத்தியே யாதாரம் நிலைத்துப்பாரு
சீரப்பா பன்னிரண்டுக் கொன்றேதீட்சை
செப்பினேன் பூரணத்திற் செப்பினேன்யான்
ஆரப்பா தீட்சையொன்றுக் காதாரமொன்று
ஆண்டொன்று தீட்சையொன் றழுத்திப்பாரே. (29)

சத்திதீட்சை பதினொன்றின் விபரம்.

அழுத்தமாய் சத்தியுட தீட்சைபதினொன்று
மறைகிறேன் உம் ஆம் மம் ஈம் ஓமென்று
வழுத்தவே வாலையுட தீட்சையாச்சு
வரிசையா யிரண்டான தீட்சைகேளு
பழுத்ததொரு யம் ரம் அம் உம் மம் ஓமென்று
பலிவாக வோதிடவே பலிக்குஞ்சித்தி
எழுத்தாகு மூன்றான தீட்சைகேளு
ஈம் ஓம் அம் உம் மம் என் றிதனையோதே. (30)

4-5-6-தீட்சை.

ஓதவே நாலான தீட்சைகேளு
உம் மம் அம் ஈம் ஐம் ஓம் என்றோது
ஶீதமா மைந்தான தீட்சைகேளு
கிலீம் ஓம் மம் அம் ஐயென்று கிருபையாக
வேதமாம் ஆறான தீட்சைகேளு
விளங்கவே ஓம் வம் ஈம் விதமாய்த்தானே
நீதமா மேழான தீட்சைகேளு
நிலைத்ததொரு ஶ்ரீம் ஈம் அம் ஐயுமென்றே. (31)

8-9-10-தீட்சை.

என்றுநீ எட்டான தீட்சைகேளு
இயம்புவாய் சவ்வும் அவ்வும் மவ்வும் ஓமென்று
துன்றுநீ யொன்பதாந் தீட்சைகேளு
நம் மம் சிம் வம் ஐம் ஓம் நலமாய்த்தானே
யொன்றுநீ பத்தான தீட்சைகேளு
உம் மம் சம் ஈம் ஓமென் றுறவாய்த்தானே
சென்றிடவே பத்துந்தான் தேவிதீட்சை
திறமாகத் தேவிபத்துந் தெளிந்துபாரே. (32)

11 - தீட்சை.

பாரென்றேன் பதினொன்றுந் தீட்சைகேளு
பகருவேன் ஓம் ரீம் சம் மம் என்றேதான்
பூரென்ற பூரணமா மேகதீட்சை
பூட்டினே னுதார தீட்சையுள்ளே
நேரென்றேன் பூரணமாம் வாலைதீட்சை
நிகழ்த்தினேன் கண்டுகொள்ளு நிசமதாகத்
தீரென்றேன் தீட்சைபத்து மாதாரத்துள்
திறமாக வொன்றுக்கு வருடமொன்றே. (33)

தீட்சை செய்மார்க்கம்.

வருடமாந் தசவருட மாருசெய்வார்
மைந்தனே சித்தரொடு முனிவர்செய்வார்
பரிஷமா யுலகத்து ளுள்ளபேர்கள்
பத்திகொண் டலைவார்க ளுரைக்கமாட்டார்

துரிதமா யுரைத்தா லுங் குருக்காணுது
சொல்லுதற்கு வுரைப்பார்கள் நூல்காணுது
புருஷமாய் கோர்வைநூல் கிட்டாவிட்டால்
போக்கென்ன வாசையென்ன பொய்யதாமே (34)

நூலின் மகுத்துவம்.

பொய்யாம விருக்கவென்று விந்நூல்வேணும்
புகலரிய தீட்சைக்கு மியோகத்துக்கு
மெய்யான கற்பமுதல் காயசித்தி
விருதான வாதவித்தை குளிகைசித்தி
வகையான கைமுறைகள் வாததீட்சை
கருவான மறைப்பென்ற சவுக்காரப்போர்க்கு
உய்யாம னூல்களிலே யொளித்தபாக
மொளியாம லெடுத்துறைத்தே னுண்மையாமே. (35)

நூலின்மார்க்கம்.

உண்மையா மிந்நூல்தான் கிட்டாத்தோஷம்
உலகத்தின் மானிடர்க ளுளரிப்போனர்
தண்மையில்லா விந்நூல்யார் கொடுக்கப்போறுர்
சாத்திரந்தான் மெத்தவுண்டு சமுசயந்திராது
வெண்மையாய்ச் சட்டமுனி தீட்சையிருநூறும்
விளம்பினர் வெளியாக வென்றுமூலா
அண்மையாய்க் கிழித்தாரே ஐயோவையோ
அல்லாம லின்னமொரு ஆகங்கேளே. (36)

சாபவரலாறு.

ஆகமங்கள் பாடுமுன்னே நவசித்தாதி
யதன்பிறகு நவகோடி கோடாகோடி
பாகமுட னுச்சுதென்று பேசிக்கொண்டு
பரமசிவன் சாபமிடப் பாலித்தார்காண்
யேகமாய் சாபமிட்டோம் வாமத்துக்கு
மியலான வச்சரங்கள் தீட்சைமார்க்கம்
போகமா யுயிர்களைத்தான் வாங்கிப்போட்டோம்
போட்டதனல் நூல்களெல்லாம் பொய்யாய்ப்போச்சே.()

நூல்சித்தி.

போச்சுதென் றலையாமல் சிவனுத்தாரம்
    பூட்டியே கேட்டுநா னிந்தநூலில்
ஆச்சுதென்று மறைத்ததெல்லா மருளிச்செய்தே
    னரகரா சாபங்கள் நிவர்த்திசெய்தேன்
மூச்சுதென்று போகாமல் முறைதப்பாமல்
    முன்னேதோ பின்னேதோ வென்றெண்ணுமல்
கா்ச்சுதென்று காச்சிவிட்டே னுலகத்துள்ளே
    கண்டவர்க்கிந் நூல்சித்தி முத்தியெண்ணே (38)

நூலீயாமை.

முத்தியிது மோட்சமிது சித்திகோடி
    முக்கியமிது சித்தருக்குங் காட்டொண்ணுது
சத்தியிது சம்புவிது வொன்றுய்ச்சொன்னேன்
    சகலநூற் கெல்லாந்தான் குருநூலப்பா
எத்தினுர் சாபத்தை நிவர்த்திசெய்து
    எத்தினல் தீட்சைதா னெளிதிலாகும்
புத்தியுட னிந்நூல்தா ணுர்க்குங்கிட்டாப்
    புண்ணியர்க்கே இதுகிடைக்கும் பொருளைப்பாரே. (39)

சாபநிவர்த்தி.

பொருளான சாபங்கள் நிவர்த்திசெய்யப்
    பூட்டினேன் சாபமது பொய்யாய்ப்போக
அருளான சிவாயநம அம் உம் என்று
    அப்பனே சிம் கிலீம் ஸ்ரீம் ஓம் என்றேதான்
மருளாமல் ரம் மம் யம் ஓம் என்றேதான்
    மாட்டுவா யிலட்சமுரு வேறிற்றுனல்
இருளான சாபங்கள் நிவர்த்தியாகும்
    ஏகமாய்ச் சொல்லிவிட்டே னியம்பக்காணே (40)

வயிரவர் தியானம்.

இயம்புவேன் வயிரவன்றன் தியானங்கேளு
    இயல்பாக யம் நம் லம் ஷம் சிங்கென்றேதான்
சயம்பாக ஷங் வங் மங்கென்று
    சாத்தியமாய் வயிரவத்தி னுமர்ந்தானே

நயம்பெறவே எண்கோண மிட்டுத்திரு
நாட்டுவாய் வன்றவொடு சுத்திவைத்து
செயம்பெறவே பூசைசெய வடமாலைசாத்தி
சித்திக்குஞ் செய்தொழில்கள் திறமாய்த்தானே. (41)

சுப்பிரமணியர் தியானம்

திறமாகசுப்ரமண்யர் செபத்தைக்கேளு
செயமாகு மெந்தனுடை குருதானப்பா
அறமாக அம் உம் ஓம் ஸ்ரீம் ஈம் சம் வம் சரவணபவதேவாயா
அறுமுகவா சிவசுப்ர மண்யநமாவென்று
உறவான அறுகோணம் நடுவேவிந்து
உத்தமனே விருத்தமொன்று வாசல்நாலு
நிசமான நால்வாசல் வீரபாகுதேவா
நிச்சயமாய் வைத்துநீ பூசிப்பாயே. [42)

அகஸ்தியர் தியானம்.

பூசிப்பாய் பாணமொடு சுத்திவைத்துப்
புகழான சாதிபுஷ்பம் புழுகுபூரம்
ஆசிப்பா சுப்ரமண்யர் சித்தியாகு
மப்பனே கேட்டதெல்லா மருளிச்செய்வார்
நேசிப்பா யென்னுடைய தியானந்தன்னை
நினைத்திடவே சித்திவந்து நிலைக்கும்பாரு
வாசிப்பாய் ஓம் சிம் வம் அம் உம் மம் தான்
மகத்தான அகத்தீசா வென்றகூறே. (43)

பிராணயம்.

கூறிடுவா யென்குருவே நந்தியென்று
கோணமுமா முக்கோணஞ் சுழிமுனைமீது
ஏறுவாய் பிராணயம் வாசியேறும்
இடகலையாஞ் சந்திரனி மேலறுயேறு
பேருபெற வேண்டிலறு லட்சந்திரு
பிராணயஞ் சித்தியடா யோகசித்தி
ஆறுடனே யாறுகும் பன்னிரண்டும்
அப்பனே பூரணத்தி லடங்கிப்போமே (44]

தூலநிலையாமை.

அடங்கினலாறுதலம் வெளியாய்க்காணு
மதீதமென்ற மேலறுபூ ரணமுந்தோன்றும்
துடங்கினல் சிவயோகந் துடங்கவேணும்
துரியாதி தந்தனிலே நிற்கவேணும்
நுடங்கினல் கூடுவிட்டுச்சீவன்போனல்
நோக்கினதிற் பிறக்குமென்று சொன்னர் முன்னேர்
அடங்கின லொன்றுமில்லை வருவதேது
அச்சடத்தை வாழ்வித்தா லவனேசித்தன் (45)

பிறவி வருகுதல்.

சித்தனைப் பிறப்பதுதா னுரென்ருக்கால்
செகத்திலே கோடியிலே யொருவனுண்டு
உத்ததொரு விட்டகுறை யென்பதென்ன
வுதித்தகலை யெங்நேர மூணிப்பாரு
பெற்றபே ரெப்படித்தான் வந்ததானல்
பிராணனல்லோ பூரணத்திற் சேர்ந்ததாலே
முத்தனை யெடுத்தசடஞ் சித்தியாகு
முன்னுமில்லை பின்னுமில்லை முறைப்பாரே [46)

கற்பமுண்ணும் முறைமை.

முறையாகக் கற்பத்தைச் சொல்லக்கேளு
மூதண்ட லேகியமும் அயக்காந்தந்தான்
துறையாக வருசுவையுங் கழற்று முன்பே
துரிதமாய்க் கொண்டுவிடு மண்டலந்தான்
நிரையாக வல்லாரை வருஷமொன்று
நேயமாய்க் கொண்டபின்பு கடுக்காய்கொள்ளு
அறையாமல் தின்னறகு மிளகுகொள்ளு
அதின்பிறகு கொங்கணர்சொல் முறையைக்கொள்ளே. ()

வல்லாரை விபரம்.

கொள்ளுதற்கு வல்லாரை முறையைக்கேளு
குழிவெட்டிக் கருப்பேற்றிப் பயிரேசெய்து
விள்ளுகிறே னிதையெடுத்துக்காடிவார்த்து
வெண்மைபெறக் கழுவியே நிழலிற்போடு

உள்ளூறவே யுலர்ந்தபின்பு யிடித்துத்தூளா
யுத்தமனே புதுக்கலசந் தன்னில்வைத்து
தெள்ளூறவே காடியிலே திண்ணவேணுஞ்
செப்புகிறேன் காடிவைக்கச் செய்கையெண்ணே. (48)

காடிவைப்பு.

எண்ணவே கருங்குருவை நெல்லைக்குத்தி
யியலான புதுப்பானை தனிற்சமைத்து
வண்ணமாய்ச் சுத்தஜல மதனில்வார்த்து
வைத்திடுவாய் மண்டலந்தான் வேடுகட்டி
சொன்னதொரு வெய்யலிலே தினமும்வைத்துச்
சுறுதியாய் மறுபானை பகுந்துமூடி
முன்னுள்ள பாண்டத்தை யனலிற்காய்ச்சி
முறையாக வதிலிட்டு சுத்தசலம்வாரே. (49)

காடி மகத்துவம்

செலம்வார்த்துப் பின்னுமதை ரவியில்வைத்துச்
செய்திடுவாய் மண்டலத்துக் கொருசோறுக
நலமாக வெவ்வேறே பகுந்துகாச்சி
நாட்டிலே வெயிலில்வைத்து ஆறுமாதம்
பெலமான காடியிது வல்லாரைக்குப்
பேசாதே யிக்கருவைப் பெரியோர்சொல்லார்
அலையாமல் வல்லாரைச் சூரணத்தை
யழகான புன்னைக்கா யளவுகொள்ளே. (50)

கொள்ளடா சமாதியிலே யிருக்கும்போது
கூறுகப் பூசித்துத் தீட்சையோதி
விள்ளடா வெயிலுடனே காற்றுமாகா
மேனியது வுலவாகா கிலேசமாகா
தள்ளடா யெண்ணெய் சுண்ணம் கடுகுவுள்ளி
தாரணியில் பெண்மாய்கை சற்றுமாகா
கள்ளடா வாகாது கஞ்சாவாகா
காசினியின் மீன்இறைச்சி யாகாநீக்கே. (51)

அடக்கம்.

நீக்குவது புளியோடு இலையுமுப்பும்
நிலையான வுறக்கமொடு கோபமாகா
ஆக்குவது சுணையாகா பொய்புமாகா
அப்பனே மனமொன்ருய்ப் புத்தியொன்ருய்த்
தாக்கவரு மாய்கையெல்லா மடித்துத்தள்ளு
சதாநித்தம் பூரணத்தி லகலாமல்நில்லு
போக்குவது பரத்தையேநீ போக்கினுக்கால்
புகழான சிவயோகம் புனிதமாமே. (52)

யோகநித்திரை.

புனிதமா யுறங்கவென்ருல் வலக்கைமேலே
பூட்டாகக் கால்நீட்டிப் பூரணத்தைநோக்கி
அனிதமாய்க் கேசரத்தில் மனதைவைத்து
அப்பனே லலாடத்தே தூங்கவேணும்
மனிதனுய்ப் பிறந்தாக்கால் சாகாக்கல்வி
வாசிக்குஞ் சிவமோடு வாழ்க்கைசேர்வான்
செனிதமாஞ் சண்டாளப் பிறலோர்கள்
செத்திறந்து செனிப்பார்கள் செகத்திற்ருனே. (53)

கற்பத்துக்குப் பத்தியபாகம்.

செனியாமல் கற்பங்கள் கொள்ளும்போது
திரிகடுகு திரிபலையுஞ் சீரகம் ஓமம்
கனியானசாதிக்காய் கிரும்புபத்திரி
கருவேப் பிலையோடு ஆவினெய்பால்
தனியான சர்க்கரைதேன் வால்குருவையரிசி
சதுரான தூதுவளை புளியாரையோடு
கனியானசிறுகீரை சிறுபயறுமாகுங்
கட்டியதோ ருப்பாகுங் கொறுக்கையாமே (54)

கடுக்காய்க் கற்பம்.

ஆகுமே கற்பூரச் சிலையின்சுண்ணம்
அண்டமொடு கல்நாருந் தங்கச்சுண்ணம்
வாகுடனே யான்சொன்னேன் மற்ருென்றுமாகா
வகையாக இந்தமுறை கற்பங்கொள்ளு

மோகமாய்க் கடுக்காயின் முறையைக்கேளு
முயல்வாகச் செங்கடுக்காய் பொற்காய்வாங்கி
பாகமா யிடித்ததனைச் சூரணித்து
பாய்ச்சுதற்கு சிற்றேரண்டத் தெண்ணெய்வாங்கே. (55)

நயனச்குறி.

எண்ணெயது வுழக்கடா பொடிதாஞழி
யியல்பாக விட்டதனை மைபோற்கிண்டி
கண்ணுன பீங்கானில் பதனம்பண்ணி
கனமான புன்னைக்கா யளவுகொள்ளு
விண்ணதனை நித்தநித்தங் கண்ணேட்டம்பார்
வெள்ளிகிற்குஞ் சுழினையிலே வாசியேறுங்
கண்ணதனை முறுக்கியே யேறப்பாரு
கபாலத்தி லமுர்தமது கனிந்துபாயும். (56]

கபசுத்தி.

பாயுமே சுழினைதனைத் திறப்பதற்குப்
பகருகிறேன் கற்பமொன்று பரிவாய்த்தானே
காயுமே கரிசாலைச் சாறுநாழி
கருதியதோர் நெய்நாழி கலந்துகாய்ச்சி
வாயுமே மெழுகுபதந் தன்னிலேதான்
வடித்துக்கைப் பெருவிரலிலதைத் தடவிப்
பாயுமே யுண்ணுக்கிற் புரளவைத்துப்
பழகவே கபமெல்லா மற்றுப்போமே. (57)

மூலசுத்தி.

அற்றுவிடும் இரண்டுவிரல் வாயிலோட்டி
யனலான கபமெல்லா மகற்றுங்கக்கு
மற்றுமினி மூலத்தின் சுத்திகேளு
வாகான குமரிச்சார் சிற்றேரண்டெண்ணை
உற்றதனை முன்போலக் காய்ச்சிக்கொண்டு
உறவாக நடுவிரலில் தோய்த்துக்கொண்டு
சுற்றிவிடு மூலத்தின் மலமெல்லாந்தான்
சுகமாகக் கீழ்நோக்கும் சுத்தியாமே. (58)

குறி மிளகு கற்பம்.

சுத்தியா யிருநேரம் நாட்டம்பாரு
சுழிதிறக்கும் பூரணத்தில் சொக்கிப்போமே
பத்தியா யமுர்தங்கொண் டிறந்துபாயும்
பாவிகட்கும் இக்கருவைப் பகரலாமோ
வெற்றியா மிளகினுட கற்பங்கொள்ள
விபரத்தைச் சொல்லுகிறேன் விரித்துநன்றாய்ச்
சித்தியாங் கணமிளகாய்த் தெரிந்தெடுத்துச்
சிறப்பான வமுரிதனைத் தேத்தாம் வித்தால். (59)

மிளகுசுத்தி மூதண்டம்.

வித்தாலே முறித்ததனை தெளியவைத்து
விதமாக ஐயைந்தாய்த் தினமுமேற்று
முத்தான வமுரியுடன் கொள்ளும்போது
முக்யமடா நூறுக்கு மதிகம்வேண்டாம்
கொத்தான உஷ்ணந்தான் மிஞ்சிற்றானால்
கூறிலொரு படியாகுஞ் செலத்தினுள்ளே
சுத்தான அருகின்வேர் பிடிதானென்று
சொல்லுகிறேன் மிளகதுதா னிருபத்தைந்தே. (60)

மூதண்ட மகத்துவம்.

அஞ்சாமற் காய்ந்ததுதா னுழக்கேயானு
லப்பனேபசு வெண்ணெய் பாக்களவுபோட்டு
மிஞ்சாமற் கொண்டிடவே வெப்புத்தீரும்
விருதான கியாழமிது மெத்தநன்று
நஞ்சுண்ட சிவனன்று கற்பங்கொண்டு
நந்தனார் சடைமீது தரித்தகற்பம்
பஞ்சகண பதிமூல வறுகீதப்பா
பார்த்தாக்கா லிதன்பெருமை பகரொண்ணாதே. (61)

மறுகற்பம்.

ஒன்றான அயக்காந்தங் கொண்டபின்பு
வுத்தமனே யறுசுவையுங் கழற்றிப்போடு
கன்றான வல்லாரை கடுக்காயோடு
கணமான மிளகோடு மறுகற்பங்கொள்

நன்றான சட்டைமுனி சொன்னமார்க்கம்
நலமாகக் கொண்டுவிடக் காயசித்தி
விண்டான கெவுனசித்தி யோகசித்தி
வேண்டியதோ ரட்டமா சித்தியாமே. (62)

கற்பமுண்ணுமுன் பக்குவம்.

ஆமென்ற மூலியெல்லாங் கறுப்பேற்றிக்கொள்
அப்பனே உன்தேகம் பெலத்துப்போச்சு
ஓமென்ற பற்பங்க ளுண்ணும்போது
வுடலிலே நோய்வந்தால் முந்நூற்றுள்ள
தாமென்ற செந்தூரம் லேகியங்கள்
தப்பாமற் செய்துவைத்துப் பின்னேகற்பம்
நாமென்று நோய்கள்வந்தால் செந்தூரத்தை
நாட்டிடவே நோய்தீரும் நளினமாமே. (63)

கற்பமுண்ணக்காலம்.

நளினமாய்க் கற்பமுண்ணுங் காலந்தானும்
நலமான கார்த்திகையு மார்கழியுமப்பா
சுளிவான சுவைதள்ளி வல்லாரை கொள்ளு
சுகமான கடுக்காய்தான் ஆனிமாதம்
அழியாம லானியிலே மிளகுகொள்ளு
அப்பனே யுதையத்திற் சீரசுத்தி
ஒளியாமல் கட்டளையை முடித்துக்கொண்டு
வுதையாதி மூன்றுக்குங் கற்பகொள்ளே (64)

பத்தியமுண்ணுங்காலம்-கலை.

கற்பந்தான் தின்பதற்கு மூன்றேமுக்கால்
கடந்தபின்பு பத்தியங்கொள் கனலேறுது
உற்பனமாங் கற்பத்தைச் சூரியனிற்கொள்ளு
உண்பதுவு முறங்குவது மொன்றேமார்க்கம்
நற்புடனே பூசைசெய்வார் காலமூன்றும்
நாளொன்றுக் கிருநேரம் நாட்டம்பாரு
சொற்பமென்ற பெண்ணாசை விட்டாலுந்தான்
சுகமானசயனத்தில் பெண்தான்வந்தே. (65)

சயனகாய்கை வாசிகுறி.

வந்துதான் மருவிடவே விந்துவீழு
மகத்தான தபமெல்லா மழிந்துபோகுங்
கொந்துதா னழியாமல் நினைவாய்த்தூங்கு
குறியான புருவமையங் குறியைப்பாரு
வெந்துதான் போகுமடா மூலத்தீதான்
மேற்கொண்டால் மாயையெல்லாம் வெளியுமாகும்
உந்திதான் பசியாம லிருக்கவென்று
லுறைப்பான வாசிகொண்டு வமுர்தமுண்ணே. (66)

கற்பமுண்ணை அறிவு.

உண்ணுவது சாதகமாய்த் தள்ளவேணு
முற்றஅறு சுவையதனை நீக்கவேணும்
பண்ணுவது சிவயோகம் பண்ணவேணும்
பார்வதியுஞ் சிவனுடைய தீட்சைவேணும்
எண்ணுவது மிதுக்கெல்லா மிந்நூல்வேணு
மிறவாம லிருக்கவென்றால் கற்பம்வேணும்
கண்ணுவது கற்பமுண்ணப் பாத்திரங்கள்
காந்தத்தி னருமைதனைக் காட்டுறேனே. (67)

காந்திபாத்திரப் பெருமை.

காட்டுகிறேன் காந்தமது முந்நூற்றுள்ளே
கலந்துரைத்த படியுருக்கிக் கருவில்வாரு
மூட்டுகிறேன் கிண்ணியைப்போல் வார்த்துக்கொண்டு
முனையான கிண்ணியிலே பாலைவார்த்தால்
ஆட்டுகிறேன் பொங்கியது மேலேநிற்கு
மப்பனே காந்தத்தி னதிகம்பாரு
நாட்டுகிறேன் தயிர்போலா மந்தப்பாலை
நலமாகக்கொண்டிடநோய் நாடாதெண்ணே. (68)

நாடாத கிண்ணியிலே கற்பமுண்ணு
நலமான வமுதுண்ணு பாலுமுண்ணு
தேடாத நெய்தேனு முண்ணலாகுந்
தினந்தோறுங் கொண்டாக்கால் சித்தியாகும்

ஓடாது விந்துவது கீழ்நோக்காது
உறக்கந்தா னுனுலுங் கட்டிப்போகுங்
கூடாத சித்தியெல்லாங் கூடுங்கூடுங்
குறிப்பான ரசமணியின் கூறுகேளே. (69)

ரசமணி.

கூறுன காந்தத்தின் கிண்ணத்துள்ளே
கொட்டியதோர் ரசத்தையின்னங் கூறக்கேளு
வீரான கருமத்தஞ் சாறுவிட்டு
வேகிறதோர் சுடுசோற்றுக் குள்ளேவைத்தால்
வேறுன வானைவீறி ட்டுச்சாறும்
வெள்ளீயம் போலுந்தான் வலுத்துப்போகும்
பேருக வெடுத்துமணி பதினுருக்கிப்
பேணியே செபஞ்செய்ய யெட்டுமாமே (70)

மணித்தொழில்.

ஆடுகிற மணியதனை சாரணையிற்றீர்ந்தா
லண்டரண்டஞ் சுத்திவருங் கெவுனமாகும்
கூடுகின்ற பெண்ணுேடே வாயிலிட்டால்
குடிகெடுத்தவிந்துவது கட்டிப்போகுங்
தேடுகின்ற தேட்டெல்லாம் ரசமணிதானப்பா
தேடவென்றுல் காந்தத்தின் கிண்ணங்கிண்ணம்
ஓடுகின்ற வோட்டெல்லாங் காந்தத்தாலே
யுத்தமனே கற்பத்துக் குறுதியாமே. (71)

அருளீதல்.

ஆமிந்த வுறுதிசொல்லார் சித்தரெல்லா
மாதிதொடுத் தந்தவரை யழகாய்ச்சொன்னேன்
ஓமிந்தநூல்போலார் வெளியாய்ச்சொன்னு
ரொழித்திட்டார் சித்தரெல்லாம் பேசிக்கொண்டு
நாமிந்த நூல்வழியாய்ச் சொன்னதென்ன
நாட்டிலுள்ளோ ரெல்லாரு மாண்டுபோனுர்
சாமிந்தப் படியானுல் தோஷமென்று
தாக்கினேன் பூரணத்தில் சாயுச்சியந்தானே. (72)

சமாதிகட்டும் வகை.

சாயுச்ய மாவதற்குச் சமாதிகேளு
சஞ்சார சமாதியது மவுனிக்காகும்
நீயுச்ய மாகவென்றால் கருவைக்கேளு
நினைத்தகுகை யாதாரம்போ லுண்டாக்கி
மாயுச்ய மாயதிலே பற்பம்போட்டு
மைந்தனே யதிலிருந்து கற்பமுண்ணு
வாயுச்ய மானதொரு யோகம்பாரு
வளமான சித்திவந்தால் மலையிலேறே. (73)

சித்தராகும் பருவம்.

ஏறியே யென்னைவந்து கண்டாயானு
லியலான சித்தனென்று பேருமீய்வோம்
மாறியே மலைகளிலே சித்தர்கோடி
மாருட்டஞ் செய்திடுவார் மருவவேண்டாங்
தேறியே பொதிகையிலே முன்னேவந்து
சித்தனென்று பேர்வந்து முத்திரையும்வாங்கி
யேறியே மலைகளிலே நடக்கலாகு
மித்தனைக்கும் வருவதுதா னருமைதானே. (74)

சிவவேட்கை.

அருமையென்ற சிவயோகம் வந்ததானு
லதிகமாஞ் சித்தருக்கு ரூபங்கேளு
பெருமையென்ற சட்டையொன்று பிரம்பதொன்று
பேரான படிகமணி குண்டலத்தோடு
தருமையென்ற வுப்பினுட சரந்தான்கையில்
சட்டையுண்டு கயிலாய வற்கமானல்
அருமையென்ற விபூதியிற் றளவுமாகி
யப்பனே யோகதண்டு நம்முத்திரைகாணே. (75)

அகத்தியர்வேடம்—மூலகுருவேடம்.

நம்முடைய முத்தரைதா னிடைகாயாஷம்
நாதனுடமுத்தரைதான் சிரசிலாகும்
தம்முடைய வர்க்கத்திற் கடிகலிங்கக்
தருவானகமண்டலமுந் தரிப்பார்பாரு

அம்முடைய தீட்சைவிதி யோகமார்க்க
மானந்த மூலகுரு வேடம்பாரு
கும்மென்ற மேருவுக்குத் தெற்கேகேளு
கோடான கோடிசித்தர் கூடினாரே. (76)

சித்தர்களிடம் உருவு
மேரு-நாலுதிக்கிலுள்ள சித்தர்-ரூபம்.

கூடினர் மேற்கிலுள்ள சித்தர்கோடி
கூர்ப்பான வயதிருபத் திருநூரப்பா
தேடினர் வளர்த்திமுழம் நாற்பதாகுஞ்
சித்திக்கு மேருவுக்கு வடக்கேகேளு
நாடினால் வளர்த்தியது நானூராகும்
நலமான மூன்றுதிசை சித்தருக்கு
ஊடினர் கிழக்கதிலே வுரைக்கக்கேளு
வுத்தமனே வளர்த்தியது நானூரெண்ணே. (77)

நூருகும் வயததுதான் முன்னிரட்டி
நூதனமா யிருப்பார்கள் கோடாகோடி
பேருகுந் தெற்கிலுள்ள சித்தரெல்லாம்
பெருமைமெத்த பெருமைமெத்தப்பேசப்போகா
ஆருகும் நாலுதிசை சித்தருக்கும்
அடையாள மென்னுடைய காயாஷந்தான்
வீருகுஞ் சித்தருக்கு மகத்துவந்தான்மெத்த
மெஞ்ஞானி சொரூபமடா விரைந்துபாரே. (78)

பூசைவிதி பிராணயம்.

விரைந்துகற்ப முண்ணயிலே முடிவளர்க்கவேண்டாம்
விடிவேரு பல்விளக்கி நாக்குத்தேய்த்து
திரைந்துவரும் வழலைசுத்தி மூன்றுஞ்செய்து
திருநீற்றை யுற்றளமா யணிந்துகொண்டு
பரந்தஅங் கன்னியாசம் கரனியாசம்
பரிவான சடங்கமது பிராணயந்தான்
உரந்துவருங் காயத்ரி தர்ப்பணமு மோமம்
உறுவேற்று மட்டகர்மஞ் சிவபூசையாமே. (79)

புத்தி.

பூசையிலே வைத்தெடுத்துக் கற்பமுண்ணு
புகழாகச் சித்திக்கும் பேறுண்டாகும்
ஆசையிலே பேரின்ப மடுத்தாயாணு
லற்பமன தின்மாய்கை நீக்கிப்போடு
வேசியைப்போ லாசைகொண்டா லெல்லாம்போச்சு
வேதாந்தம் நீயென்று லொருமனதாய்நில்லு
காசில்லை யென்றுசொல்லி விட்டிடாதே
கற்பமுண்டால் வாதசித்தி கைக்குள்ளாமே. (80]

சுத்திமார்க்கம்.

கைக்குள்ளாய் வாதசித்தி வருகவென்றால்
கருவையெல்லாஞ் சொல்லுகிறேன் கனிந்துகேளு
மெய்க்குள்ளா யைம்பதுக்குள் சொன்னேன்முப்பூ
வெளியாகச் சொல்லிவிட்டேன் சுத்தியில்லை
முக்கியமாஞ் சுத்திதனைச் சொல்லக்கேளு
முப்பத்தி ரண்டென்றுகொங் கணர்தான்சொன்னார்
தொக்கிலே சொல்கிறேன்நீ கேளுகேளு
சுத்தியுட சுப்பிரத்தைச் சுருக்கித்தானே. (81)

முப்பூசுத்தி.

சுருக்கியே சொல்லுகிறேன் முப்பூவப்பா
தூக்குவாய் வகையொன்று பலமொன்றாகச்
செருக்கியே பனிவிளைந்த நீரைவாங்கித்
தெளித்துநீ வைத்திடுவாய் வெவ்வேறாக
நெருக்கியே வெய்யிலிலே காயக்காய
நேராக வொன்றுக்குப் பத்துநாள்தான்
தருக்கியே வகையொன்று சலம்படிதானென்று
தாக்கியே வெய்யலிலே காய்ந்தபின்னே (82)

காய்ந்ததின்மே லின்னமொரு சுத்திகேளு
காசினியி லமுரியினால் முன்போற்காய்ச்சு
வாய்ந்தபின்பு தேசியின்னீர் தன்னில்முன்போல்
வளமான சாரநீர் தன்னில்முன்போல்

ஏய்ந்தபின்பு முப்பூவு மொன்றாய்ச்சேர்த்து
யிதமான கிளிஞ்சினீர் படிதான்வாங்கி
பாய்ந்திடவே பத்துமுறை தெளித்துநீயும்
பரிவாக வற்றவற்றத் தெளியக்காய்ச்சே. (83)

வேடியுப்புச் செயநீர்

காய்ச்சியபின் இன்னமொரு கருவைக்கேளு
கனமானவெடியுப்புப் புளியுங்கூட்டி
வாய்ச்சுதே யிடித்துநன்றாய்த் தீயைமுட்டு
வளமாக நீற்றியிதைச் சுண்ணும்பாக்கிப்
பாய்ச்சுவாய் நாலிலொன்று சாரந்தானும்
பரிவாகப் பொடித்துநன்றாய்ப் பனியில்வைக்க
ஆய்ச்சியாஞ் செயநீரா மந்நீர்தன்னை
அரைப்படிதான் வாங்கிவைத்து அறையக்கேளே. (84)

முப்பூச்சுண்ணம்.

கேளப்பா வீரமொடு பூரஞ்சீனங்
கெடியான வரமுடனே குருவண்டுநாபி
சூளப்பா வகையொன்று கழஞ்சியொன்று
சூட்டியே பொடித்தந்த நீரில்போடு
நாளப்பா யிருந்துடனே சிவந்துபோகும்
நலமான செயநீரில் போட்டுக்காய்ச்சு
தேளப்பா கொட்டியதோர் சுண்ணமாச்சு
திடமாக யிடைக்கிடைதான் சூடன்சேரே. (85)

சூடச்சுண்ணம்.

சூடனுக்கு நேர்பாதி வீரங்கூட்டி
சுகமான புழுகதிலே களஞ்சிகூட்டி
தேடுகின்ற வெடியுப்பு நீராலாட்டி
சிறப்பாக வில்லைசெய்து ரவியிற்போடு
நாடவே காய்ந்தபின் போட்டில்மூடி
நலமாகச் சந்துவாய் சீலைசெய்து
போடவே முழப்புடத்திற் சுண்ணமாகும்
போக்கதிலே சொல்லுகிறேன் புகழ்ந்துபாரே. (86)

துரிசிச்சுண்ணம்.

புகழான சுண்ணத்தில் மஞ்சாடிவாங்கி
பூசுவாய் துரிசிக்கு வாய்நீராலே
சுகமான வெய்யலிலே காயவைத்துச்
சொல்லுகிறேன் பூநீற்றில் சீலைசுற்றி
அகமான வோட்டில்வைத்து வோடுமூடி
அப்பனே சந்துவாய் சீலைசெய்து
முகமான மூன்றெருவில் புடத்தைப்போடு
முக்கியமாய் நீறும்பின் னெடுத்துக்கொள்ளே. (87)

தாளகச் சுண்ணம்.

எடுத்ததொரு துரிசிநீர் வேகமெத்த
யென்சொல்வே னிரதத்தைச் சண்ணிக்கொள்ளும்
அடுத்ததொரு துரிசிநீர் வீரங்கூட்டி
அழகான தாளகத்தி லப்பிப்போடத்
தொடுத்ததொரு புடத்தினிலே வெளுத்துநீறுஞ்
சுகமான வுபரசங்க ளியமாகுங்
கொடுத்திடவே பத்தரையுந் தப்பாதப்பா
கோடான கோடிகவ ராடும்பாரே. (88)

நூலின் பெருமை.

ஆடியதோர் முப்பூவின் கருவையெல்லா
மறைப்பற்றுச் சொல்லிவிட்டே னலையவேண்டாம்
தேடியதோர் கருக்களெல்லாம் வெளியாய்ப்போச்சு
செகத்திலே கிட்டுகிலோ சித்தராச்சு
மூடியதோர் கருவெல்லாந் திறந்தேனென்று
மோசமென் றிந்நூலை யொளித்திட்டார்கள்
நாடியே நானெடுத்துப் பாவநாச
நற்றீர்த்தக் கரைதனிலே வைத்திட்டேனே (89)

நூல்வந்த வழி

வைத்திட்ட நூலெடுத்தா னொருவேளாளன்
வந்ததடா யிப்படித்தா னுலகத்துள்ளே
கைத்திட்ட மானபல விந்தநூல்தான்
கசடருக்கும் பாவிகட்குங் காணுதோடும்

பொய்த்திட்ட சாத்திரங்க ளெல்லாமெய்தான்
போக்கரிய விந்நூலைப் பேணிப்பாரு
யெய்த்திட்ட கருவெல்லாந் தோயுந்தோயும்
ஈசுரனுந் தேவியுந்தா னிரைஞ்சுவாரே. (90)

சவுக்கார வைப்பு

இறைஞ்சுவார் சவுக்கார வைப்பைக்கேளாய்
இயலான உவருப்பு அமரியுப்பு
மறைவான கல்லுப்பு வெடியுப்போடு
மருவியதோர் கல்லாணைக் கிளிஞ்சிச்சுண்ணம்
நிறமான சூடனொடு பாறையுப்பு
நேராகச் சட்டமுனி கொங்கணர்தான் சொன்னார்
குறையாம லம்முறைக்கு வைத்துக்கொண்டு
கூசாமல் சட்டமுனி சொன்னமார்க்கம். (91)

சொன்னபடி யெண்ணெய்தனைக் கழற்றிப்போடு
சூட்சமாய்க் கடுங்கார மேற்றியேதான்
நன்னயமாய்க் கல்லுப்பைக் கட்டிக்கொண்டு
நலமான வித்தையெல்லா மாடிப்பாரு
பொன்னதிலே யுண்டாகுங் குளிகைகட்டிப்
பொதிகைதனில் வந்தென்னைக் கண்டுசேவி
யின்னமொரு சேதியுண்டு சொல்லக்கேளு
யிதமான வறுசுவையுங் கழற்றுவாயே. (92)

சுந்தரானந்தர் முறை—கற்பம்

கழற்றுவாய் சுந்தரன்றந் நூலைப்பார்த்துக்
கடுக்காயைக் கொண்டுவிடு வருஷமொன்று
தளத்துடனே மிளகுதனைக் கொண்டாயானால்
சடத்திலுள்ள நோயெல்லாந் தானேபோச்சு
கழற்றுகின்ற நோயெல்லாஞ் சுருக்கிச்சொல்வேன்
துடியான வல்லாரைக் கற்பத்தேதான்
இளைத்துநீ போகாமல் வருடங்கொண்டா
லிருப்பாயே யிருநூறுண் டிருந்துகாணே. (93)

குளிகை செய்கை

ஆண்டிருக்கச் செய்துகொண்டு வயக்காந்தத்தை
யப்பனே கொண்டுவிடு வருடமொன்று
பூண்டிருக்கும் பிறகுகொள்ளு கற்பமெல்லாம்
புகழாக முப்பூவை முடித்துக்கொண்டு
ஏன்றதொரு வேதைதனைக் கண்டுகொண்டு
யிரதமென்ற ஆனைதனைக் குளிகைசெய்து
மூன்றதொரு குளிகைக்குச் சாரணை தான்றீர்க்கு
முன்பாகத் தங்கமொடு சூதங்கூட்டே. (94)

இரசச்சேந்தூரம்

கூட்டியே கெந்திதனைக் குப்பிக்கேற்றி
குலாவியே செந்தூரம் செய்துகொண்டு
நாட்டியே வருடமொன்று கொண்டாயானால்
நமனில்லை கோடிவரை யிருத்தும்பாரு
பூட்டியே வாசிதன்னைக் கூட்டிக்கொண்டு
புதுமையுள்ள மலைமேலே யேறியேதான்
ஆட்டியே மலையிலுள்ள கற்பங்கொள்ளு
அதிகமாய் ரிஷிகளைநீ தெரிசித்தேதான். (95)

சித்தர்களைக்காண்கத் தியானம்-அடுக்கும்வகை

தெரிசிக்கத் தியானமொன்று சொல்லக்கேளு
சிவாயநம ஓம்கிலீம் என்றுசேவி
வரிசிக்குஞ் சித்தரெல்லாம் வெளியிற்காணு
மகத்தான சித்தரப்பா வணங்கிநில்லு
பரிசிக்கும் படியவரைக் கண்டாயானால்
பணிந்திடுவாய் பாதத்திற் சிரசுதட்ட
கிரிசிக்கும் ஆர்நூலில் சார்ந்தாயென்று
கேட்கிலகத் தீசுரர்தான் கிருபையென்னே. (96)

சித்தர்மகத்துவ மளித்தல்

என்னுடைய பேர்சொல்லிக் கூட்டிக்கொண்டு
யிசையான பொதிகையிலே யேறுவார்பார்
உன்னுடைய திறங்கண்ட போதுதானே
உறுதியுள்ள சித்தனென்று பேறுமீய்வேன்

மின்னுடைய வொளிகாட்டி யறுதலமுங்காட்டி
மெஞ்ஞான வீடுபெற நிலையுங்காட்டி
பன்னுடைய சிதம்பரமு மேருபூசைப்
பாலிப்போ மஷ்டாங்கம் பரிந்துகாணே. (97)

யோகிகளுக் கிருப்பிட விசேடதலம்

பரிவானயோகிக்குத் தலத்தைக்கேளு
பகருவேன் காசிவரை கன்னிமட்டுந்
தெரிவான மலைச்சார்பு மெத்தநன்று
தேசத்தில் நாடதிகஞ் சோழதேசம்
அரிதான பாண்டியிலே வைகைநாடு
அடுத்ததொரு கள்ளர்பத்து அழகர்கோவில்
உரிதான திண்டுக்கல் காளையார்கோவில்
உறவான மதுரையொடு குன்றுருமே (98)

ஆறான தாம்பிரவேணி கரைப்போக்கெல்லா
மாமடா வெகுசித்தி பொதிகைச்சார்பு
கூறான சிதம்பரமுங் காவேரிபோக்குங்
கொள்ளுகிற கற்பமெல்லாஞ் சித்தியாமே
தூறான கன்னியிலே குமரிநின்றாள்
நற்பனமாய் வாலையடா அவள் தானப்பா
பேருகும் நான்சொன்ன தலங்களுக்குப்
பேதமில்லை பேதமுண்டு பேசுறேனே. (99)

பேதபூமி

பேசுவது சமுத்திரத்துக் கப்பாற்பத்து
பேறான கடிகையதா மேற்கேசென்று
வீசுறதோர் கற்பங்க ளுண்ணவேணும்
மெஞ்ஞானிக் கெங்குமாம் வேதாந்திக்கும்
ஆசுறதோர் தலமதிகம் நிலமதிகம்பாரு
அப்பனே குளிர்ந்ததல மாகுமாகும்
கூசுறதோ ரென்னவென்றால் ராசகீதங்
குவலயத்தில் மனுநீதங் சொள்கைபாரே. (௱)

புத்தி

பாரப்பா சமாதியிலே யிருக்கும்போதும்
பலபலவாந் தொழில்முறைகள் செய்யும்போதும்
நேரப்பா பலகூட்டங் கூடலாகா
நெறிகெட்ட சீடர்களைச் சேர்க்கலாகா
ஆரப்பா தனியேதா னிருந்துகொண்டு
அளவறந்த வித்தையெல்லா மாடுமோடுஞ்
சீரப்பா தேகசித்தி யோகசித்தி
செயலான மலைகளிலே சேர்ந்துகொள்ளே. (௱க)

பூமிநாதம் விளைபூமி

கொள்ளென்ற குமரிக்கு மேற்கேகேளாய்
கூறுவேன் பதின்காதங் குணமாம்பூமி
விள்ளென்ற பூமிதனிற் பூமிநாதம்
விரைந்தெடுக்குந் தலங்களையான் விரித்துச்சொல்வேன்
உள்ளென்ற நாசிக்குந் தெற்கேபத்து
வுறவான கடிகைக்குட் பூமியொன்று
யெள்ளென்ற பூமிக்குக் கிழக்கேதானு
மிருபதுநா ழிகைக்குள்ளே தலமொன்றுண்டே. (102)

உண்டப்பா முன்சொன்ன தலத்துக்கப்பால்
யோசனைதா னென்றுசென்றால் தலமொன்றுண்டு
நன்றப்பா வதின்பிறகு மேற்கேசென்றால்
நலமான கடிகைபத்து மலைச்சார்புக்குள்
சென்றப்பா பார்த்தாக்கால் தலமொன்றுண்டு
சித்தருட நடமாட்டஞ் சொல்லப்போகா
இன்றப்பா சொல்லுகிறேன் விலாடபுரந்தன்னில்
வெகுவீதி யொருதலந்தான் விசாலமெத்தவாமே. (103)

தலவிசேட மகத்துவம்

மெத்தவடா டில்லிக்கு மேற்கதாக
விருதான தலங்களுண்டு மேவிப்பாரு
சித்தரப்பா கஞ்சமலை சித்தர்வாழ்க்கை
திரண்டதொரு மலையுண்டு வதற்குள்ளப்பா

உத்தமமாங் குருநாட்டில் ஞாலந்தானென்று
உயர்ந்தமலை யடிதானே சித்தருக்கு
வெற்றியுள்ள கன்னடியார் தேசந்தன்னில்
மேலான வயிந்தநகர் தலந்தானென்றே (104)

தலமான ஆற்காட்டின் மேற்கேபத்து
சார்ந்தாக்கா லங்குமே தலமொன்றுண்டு
பெலமான காவேரிப் பூமிதன்னில்
பெருத்ததொரு தலமொன்று சீரங்கத்தில்
நிலமான கோகரணத்துக் கப்பாலேதான்
நெடுந்தூரஞ் சென்றக்கால் தலமொன்றுண்டு
குலமான திண்டுக்கல் தேசந்தன்னில்
குணமான தலமொன்று கூர்ந்துபாரே. (105)

கூர்ந்துபார் கள்ளருட தேசந்தன்னில்
குணமான தலமொன்று வள்ளலூரில்
சேர்ந்துபார் மதுரைக்குத் தெற்கதாகத்
திறமான கடிகைபத்துக் கப்பாலொன்று
ஏர்ந்துபர் ரதுக்கப்பால் கடிகையைந்தி
எல்லையிலே தலமொன்று யிருக்கும்பாரு
தீர்ந்துபார் மதுரைக்குக் கிழக்கேயப்பா
சேர்ந்துபத்துக் காதத்திற் கப்பாற்செல்லே. (106)

செல்லவே வலையல்செய்யும் பேர்களுண்டு
செயமான தலமதிகஞ் சேர்ந்துபாரு
மெல்லவே யதின்கிழக்கு மறவர்நாட்டில்
வெகுதலங்களுண்டுசமுத் திரம்வரைக்கும்
நல்லதொரு கல்லுப்புக் கடலிலுண்டு
நலமான சமுத்திரத்தின் ஸ்ரீராமர்பிரதிஷ்டை
வல்லதொரு நாட்டுக்குள் தலமொன்றுண்டு
மைந்தனே தாம்பிரவேணி வளமைகேளே. (107)

5

ஆற்றின்கரை பூமி வளமை.

வளமையா மாற்றினுட கரைப்போக்கெல்லாம்
வாகான நாலாறு தலங்களுண்டு
இளமையா மதின்தெற்குக் குமரிவரைகேளாய்
ஏழுதல முண்டப்பா வதற்குமப்பால்
பழமையாங் குறவருட தேசந்தன்னிற்
பதிவான தலமுண்டு கிட்டக்கிட்ட
உளமையாந் தலங்கள்ரெம்ப யீதல்லாமல்
உறைப்பான பூவெல்லா முற்றுப்பாரே. (108)

சலாசத்து பொன்னப்பிரகம் வெள்ளை அப்பிரக பூமி.

பாரப்பா சலாசத்து விளையும்பூமி
பரிவான குமரிக்குங் கிழக்கதாக
நேரப்பா காதமது பத்துச்சென்றால்
நிலத்திலே வெட்டியே யெடுப்பார்பாரு
சீரப்பா பொன்னென்ற வப்பிரகந்தான்
தென்காசிக் கடுத்ததிலே தலந்தானென்று
வேரப்பா வெள்ளையென்ற வப்பிரகந்தான்
விரிசதுர கிரிக்கடுக்க விளையும்பாரே (109)

பொன்னிமிளை மூவிலைக்குருந்து சோதிவிருட்சம் வெண்சாரை.

விளையுமடா கிழக்காகக் காதமூன்றில்
வெகுவிதமாம் பொன்னிமிளை விளையும்பூமி
தளையுமடா பொதிகைமலைச் சார்புதன்னில்
தாம்பிரவே ணிக்கரையி லருவியாற்றில்
முளையுமடா வதனடுத்த தெற்கேகாத
மூவிலையாங் குருந்துதான் மரமுண்டாகுந்
தனையுமடா வதிநடுவே சோதிவிருட்சந்
தன்னோடு வெண்சாரை தானுமுண்டே. (110)

வெண்ணுவல்.

உண்டடா பச்சையா றதனிலப்பா
யுத்தநம்பி வாசமலை யுயர்த்திமெத்த
நன்றடா வதினுடைய கரையிலேதான்
நாலாறு மரம்நிற்கும் வெண்ணுவலப்பா

கொண்டடா வம்மலையில் சித்தர்கூட்டங்
குறையாது வொருநூற்றுப் பத்துப்பேர்கள்
கண்டடா வம்மலையில் விருட்சமூலி
கனமடா சித்தரால் காணுணதே. (111)

நீலக்கோடிவேலி சங்கிலிச்சித்தர் வாசம்.

காண்போர்க ளம்மலையிற் கிணறொன்றுண்டு
கருநீலக் கொடிவேலிக் கரையிலுண்டு
வீண்பேர்கள் போனக்கால் காணுதப்பா
விருதுபெற்ற சித்தர்கடான் போகவேணும்
தாண்பான மயேந்திரமா மலையிலேதான்
சங்கிலிச் சித்தருண்டு கொங்கணர் தன்பிள்ளை
ஊண்பேர்கள் போனக்க லேறப்போகா
உறப்பான கெவுனிக்கு யேறலாமே. (112)

வெண்சாரை வாழுமிடம் வெண்சாரையைக் காணுமிடம்.

ஆகுமே தாடகைதன் சுனைதானென்று
அதில்வாழும் வெண்சாரை யஞ்சாறுண்டு
போகுமேயச்சாரை மயேந்திர மலையெல்லாம்
போக்குவரத் தாயிருக்கும் பூண்பார்சித்தர்
ஏகுமே யம்மலையி லேறிச்சென்று
வியல்பான சுனையருகில் மண்டலந்தானென்று
வாகுமே தானிருக்கும் போதுதன்னில்
வகுத்ததிலே காணலாஞ் சாரைதன்னை. (113)

சாரை பிடிக்குமுறை வெண்சாரை யறுந்தல்.

தன்னையே கண்டவுடன் ரம்பித்தேதான்
சார்வான நடுமையம் பிடித்தாயானல்
பின்னையே பிடித்தவிடங் கையிருக்கப்
பேராக விருதுண்டாய்ப் பொருந்திப்போகும்
மின்னையே கையிலிருக்கு மதனைத்தின்று
விருபதினு யிரவருட மிருத்தும்பாரு
பொன்னையே தேடாதே கற்பந்தேடு
பொருள்காணப் புருவமையம் நோக்கிப்பூணே. (114)

சதுரகிரி மகத்துவம் - பொன்மலை மகத்துவம்.

பூணப்பா மயேந்திரத்தி லேறித்தெற்கே
போனக்கால் நாழிகைதான் பொன்மலைதானுண்டு
ஆணப்பா வதனிலொரு குகையுமுண்டு
வதிலிருப்ப ராயிரம்பே ரதிகசித்தர்
காணப்பா அவர்களைத்தான் கண்டாரானால்
கனகமது கேட்டதெல்லாங் கையிலீய்வார்
நாணப்பா கெவுனமென்ற குளிகையீய்வார்
நலமான கற்பமது நல்குவாரே. (115)

தாடகை சுனைமகத்துவம்.

நல்குவர் ரம்மலையி லுதகமுண்டு
நலமான தயிலமுண்டு பாஷாணமுண்டு
செல்குவார் மூலிகைதான் கோடியுண்டு
திரவியங்கள் கிடாரத்தி லிருப்பதுண்டு
புல்குவார் தாடகையிற் கிழக்குராவில்
புதுமையொன்று சொல்லுகிறேன் பிழைக்கும்பேர்க்கு
ஒல்குவா ரடையாள முரைக்கக்கேளு
ஓராளுயரம் வொருகையில் தறட்டிதானே. (116)

தயிலமிருப்பிடம்-தயிலமெடுக்கும் விபரம்.

கையிலொரு அறட்டிதனைக் கண்டாயானால்
காணப்பா வதனருகே கல்சிற்பூண்டு
செயலோடு சித்தரையு மங்காளிற்றன்
சென்றக்கால் தயிலமது சிவந்துபாயும்
நயமாக வதிநடுக்கக் குழிதானென்று
நலமாக வதிற்றயிலஞ் சென்றுபாயும்
மயமாகுந் தயிலஞ்சித்தர் கொடுபோமுன்னே
மைந்தனே காத்திருந் தெடுத்துக்கொள்ளே. (117)

தயிலம்வைக்கப் பாத்திரம்-தயிலம்வைக்க மகத்துவம்.

கொள்ளுவது பேய்ச்சுரையின் குடுக்கைதன்னில்
கொள்ளமட்டும் மடைத்ததனைக் கொண்டுபோய்நீ
விள்ளுகிறேன் காசிடைதா னுள்ளேகொள்ளு
மேன்மையா மண்டலத்தில்சாவுபோச்சு

தள்ளுவது சட்டையது யெல்லாந்தள்ளுஞ்
சயிலவு தகமென்ற தயிலமப்பா
எள்ளளவு இரும்பிலே தடவிப்போட
யேமமென்ற வித்தையது கைக்குள்ளாச்சே. (118)

மயேந்திர மலைவளப்பம் நெல்லியிடம் வாலரச மிருக்குமிடம்

உள்ளான மயேந்திரமா மலைத்குத்தாழ
ஒருபுறமாம் வடபக்கந் தன்னிலேதான்
கல்லான கல்லிலே குகைதானுண்டு
கருநெல்லி யதனிலே யொருமரந்தானுண்டு
தள்ளாத குகைதனிலே கற்பரணிநாலு
தயிலமுண்டு வுதகமுண்டு தனந்தானுண்டு
விள்ளாத வாலரசமொன்றதாகும்
மேலான பரிசனமாம் வேதையாமே. (119)

நம்பிமலைவளம் சோதிவிருட்சம்-செங்கற்றாழை.

ஆமென்ற நம்பிமலை வடபுரத்தில்
லதிகமாஞ் சோதியது ஆல்போல்நிற்கும்
வாமென்ற வதினருகே செங்கற்றாழை
வரிசையாய் நிற்குமடா யிரத்தவர்னம்
போமென்ற காயசித்திக் கேற்றகற்பம்
புதுமையின்னஞ் சொல்லுகிறேன் பூண்டுகேளு
தாமென்ற பொதிகைக்குக் கிழக்குச்சார்பில்
தாண்டியொரு நாழிகைதான் மலையிற்சென்றால் (120)

சிவந்த விலைக்கள்ளி சேந்திராய் சுணங்கன்மூலி

சென்றிடவே யவ்விடத்தில் சுனைதானென்று
சிவந்ததொரு இலைக்கள்ளி செங்கிராயுங்
கன்றிடவே யுண்டாகுஞ் சுணங்கன்மூலி
காயசித்திக் கேற்றகற்பம் கனக்கவுண்டு
பண்டுடைய கற்பத்தைக் கண்டபேர்க்குப்
பரிவான காயசித்தி கெவுனசித்தி
யென்றுமே வாதசித்தி யெய்துமெய்தும்
இறைவனைப்போ லெந்நாளு மிருத்தும்பாரே (121)

நரைதிரைமாறத் தயிலம்.

இருத்துகின்ற தயிலமொன்று இயம்பக்கேளாய்
இயலான கடுக்காய்வேர்த் தயிலம்நாழி
வருத்துகின்ற நெல்லிக்காய்த் தயிலம்நாழி
வளமான தாணிக்காய்த் தயிலம்நாழி
திருத்துகின்ற கருந்துவரைத் தயிலம்நாழி
சேங்கொட்டை வித்தினுட தயிலம்நாழி
பொருத்துகின்ற யழிஞ்சிவிரை தயிலம்நாழி
புகழான வேம்பின்ருேல் தயிலம்நாழி. (122)

நாழியென்ற சிவன்வேம்புத் தயிலம்நாழி
நலமான காரெள்ளுத் தயிலம்நாழி
வாழியென்ற வாலுளுவைத் தயிலம்நாழி
வளமான வகையெல்லாந் தயிலம்வாங்கி
தரீளியென்ற பீங்கானும் பாண்டத்துள்ளே
சாதகமாய் விட்டுமொரு சேதிகேளு
காழியென்ற தயிலமதி லோகங்காந்தங்
கருதியதோர் செந்தூரங் கலந்துகொள்ளே. (123)

மலையேறப் பக்குவம்—தயிலத்துக்குப் பத்தியம்.

கலந்ததனை நெல்லுக்குள் மண்டலந்தான்வைத்து
கணபதியைப் பூசித்துக் காசிடைதான்கொள்ளு
மலந்திதொரு மண்டலந்தான் கொண்டாயானல்
வளர்கின்ற நரைமாறி வண்டுபோலாம்
நலந்திகழுந் தேகமது சிவந்துகாணும்
நாட்டுக்கு ளதிகமது நாட்டிப்பாரு
பலந்தருங்கா ணித்தயிலஞ் செய்துகொண்டு
பாரிக்கு மலைமேலே யேறுயேறே. (124)

ஏறுவது யெப்படித்தா னென்ருயானல்
இடும்பென்ற ஆணுவமு முனிவுந்தீர்த்து
கூறுகின்ற கொலைகளவுங் காமம்பொய்யுங்
கொடுமையென்ற பாவங்கள் தன்னைத்தீர்த்து

மாறுகின்ற மனந்துறந்து நிராசையாகி
வளமாகப் பச்சரிசி பொங்கியேதான்
தேறலது பால்கூட்டிச் சிறுபயறுங்கூட்டிச்
செயமாக வோர்வேளை யமுதுகொள்ளே. (125)

வாசிக்குறி.

கொள்ளயிலே யிடைகலையில் வாசிபாரு
கூசாமல் நெட்டோடே யேறுயேறு
தள்ளையென்ற வாத்தாளை நித்தம்பூசி
சாயுச்சிய பதத்தைநித்தம் சார்ந்துநில்லு
வள்ளையிலே யிதுவெல்லா மகிழ்ந்துபாரு
மகத்தான பூரணமு மனதிற்றோன்றும்
பிள்ளையிலே யுங்களைப்போல் பிள்ளையுண்டோ
பேய்மக்கா ளலையாதே பிழைத்துக்கோவே. (126)

பசுபதிபாசம்-புரியட்டம்.

கோவென்ற பசுவொன்று பதிநானென்று
கூறுகெட்ட பாசமொன்று மூன்றுங்கூட்டித்
தேவனென்ற பிறப்புக்கு இடமுண்டாச்சு
சித்தனென்று விதைத்தள்ளி சிவயோகஞ்சேர்
ஆவென்ற வகையில்லை யென்றுசொல்லி
யலையாதே யிந்நூலி லடுத்தசித்தி
பூவென்ற ஆயிரத்தெண் மலர்ப்பூவைத்தான்
போத்தியே தீமூட்டப் புரியட்டம்போமே. (127)

பசியாதிருக்க.

போமென்ற புரியட்ட மெட்டினாலே
போகாம லடங்கினல் பிறவிபோச்சு
சாவென்ற சொல்லேது லபிதானேது
சாயுச்சிய மானதொரு ஞானவானே
யர்மென்ற அமுர்தமது வுண்டாயானல்
அப்பனே பசிபோச்சு சித்தியாச்சு
நாமென்ற வாணுவமு மப்போபோச்சு
நலமான சிவசித்தன் ஞானியாமே. (128)

தேக வாசனை.

ஞானியென்று வொருகுலையில் காய்த்ததோசொல்
நரசென்மங் கோடியிலே யொருவனப்பா
யோனிவாய்ப் பட்டசட மாகையிலே
யுத்தமனே காயசித்தி யாகவேணும்
ஊனென்ற தேகமது கற்பதேகம்
உத்தமனே கயிலாய தேகமானல்
மானிலத்தின் மனிதனல்ல தேவனுச்சு
மைந்தனே யற்பமடா மனிதர்வாழ்வே. (129)

பூநீற்றுக்குரு.

வாழவே இன்னமொரு வரிசைகேளு
வளமான பூநீற்றை வாரிக்கொண்டு
தாளவே சாறுவராத் தழைகளெல்லாஞ்
சாதகமாய்ப் போட்டிடவே தண்ணீராகுஞ்
சூழவே காரத்தைச் சிறுநீருப்பில்
தோய்த்திடவே காரமது சுண்ணமாகும்
கூறவே சாறுகளில் போட்டுச்சாற்ற
குருவென்ற கற்சுண்ணத் துப்புச்சத்தே (130)

பாஷாணக்கட்டு.

சத்தான சாறுவகை சொல்லக்கேளு
சம்பீரச் சாறுதான் படிதானென்று
வித்தான முன்சொன்னகுரு வகைதானென்று
விளங்கவே வகையொன்று வராகனென்று
முத்தாகப் போட்டதனைக் கலக்கிவைத்தால்
முறிந்துமே யொருநாளில் தண்ணீராகும்
பத்தான தெளிவதனை யிறுத்துக்கொண்டு
பாஷாணங் கழஞ்சுக்குச் சுறுக்குப்போடே. (131)

அயமணி.

போட்டிடவே பாஷாணங் கட்டிப்போகும்
புகழான செம்பிலிட வெள்ளியாகும்
ஆட்டிடவே யரைப்பொடியில் விட்டரைத்து
அளவாக வுணக்கிடவே மணியுமாகும்

நீட்டிதோர் தங்கமதிற் சேர்த்துருக்கி
நிசமாக வெள்ளிசெம்பி லீய்ந்தாயானால்
காட்டிடவே யாரேழு வரைக்குங்காணும்
நலமான இரும்பிலிட வேதைதானே. (132)

தாம்பிரவேதை.

இரும்பைவிட்டுச் செம்பதனைச் சொல்லக்கேளு
எழுத்தாணிப் பச்சிலையின் சாறுநாழி
முருங்கையுட பட்டைச்சார் நாழிகூட்டி
முந்தினதோர் குருவகைக்கி வராகன்போடு
அறும்பவே யறுபதுநா ழிகைகடந்தால்
அதனுடைய தெளிவதனை யிறுத்துக்கொண்டு
திரும்பான செம்பதனை யுருக்கிச்சாய்த்தால்
சுகமாக வீரஞ்சு துய்யானுமே. (133)

பாஷாணக்கட்டு.

துய்யானி லிடைக்கிடைதான் சேர்த்தாயானால்
துய்யனுஞ் சொல்லரிது சொல்லிவிட்டேன்
மெய்யாகச் சொல்லுகிறேன் சதுரக்கள்ளி
விதமான பாலதனைக் கறந்துவந்து
அய்யாகேள் முன்குருவில் வராகன்போட்டு
அறுபதுநா ழிகையிருக்கத் தெளிந்துபோகும்
உய்யவே யொருகழஞ்சு வெள்ளையப்பா
வுழக்குநீர் சுருக்கிட்டாற் கட்டிப்போமே. (134)

நாகக்கட்டு.

போகின்ற பாஷாணந் தன்னைவாங்கி
புக்கிடவே கழஞ்சுக்கு மஞ்சாடித்தூள்
ஆகின்ற நாகமது கட்டிப்போகும்
அந்தஇடை தங்கத்தை யதனிற்றூக்கி
ஏகின்ற வெள்ளிசெம்பி லீய்ந்தாயானால்
யேழரையா மிதன்பெருமை யியம்பப்போமோ
வாகுடைய வமுரியது படிதானென்று
மைந்தனே முன்குருவும் வராகனென்றே. (135)

சூதக் கட்டு.

ஒன்ருகப் போட்டதனை வைத்தாயானல்
உத்தமனே கல்சமந்தா னுரைந்துகாணும்
பன்ருகத் தெளிவிறுத்து ரசத்திற்கூத்த
பாலையாம் ரசமதுதா னட்டைபோலாம்
நன்ருக வதையெடுத்துக் கருவூமத்தை
நலமான காயதனிற் புடத்தைப்போடு
வென்ருகவோர்புடந்தான் கோழியாகும்
விதமாகக் கட்டிப்போம் வெள்ளியாமே. (136)

சூதகச் செந்தூரம்.

வெள்ளியென்ற சூதத்தைத் தின்ருயானல்
வெள்ளையென்ற நரைகளெல்லாம் வண்டுபோலாங்
தெள்ளியதோர் தங்கமிட்டு கெந்தியிட்டு
செந்தூரஞ் செய்திடவே சொர்னமாகும்
அள்ளியதோ ரசவெள்ளி கெவுனமாகு
மப்பனே சாரணையைத் தீர்ந்தபோது
உள்ளியென்ற காட்டுள்ளி யிடித்துக்கொண்டு
வுத்தமனே முன்குருவைப் போட்டிடாயே. (137)

வெள்ளீயம் நீர்வாங்கல்.

போட்டதனைப் பிழிந்திடவே தண்ணீராகும்
புகழான முன்குருவைப் பின்னுமிட்டு
ஆட்டிதனை வைத்துவைக்கத் தெளிவதாகும்
அத்தெளிவில் வெள்ளீய முருக்கிச்சாய்க்கப்
பூட்டிதனைப் பத்துமுறை சாய்த்தாயானல்
புகழாகக் கட்டிப்போம் பூண்டுபாரு
நாட்டதனில் ரசங்கட்டுஞ் சுறுக்குப்போடு
நலமான குளிகையது கெவுனமாமே. [138)

லிங்கக்கட்டு.

ஆமப்பா முன்குருவை யிலைக்கள்ளிப்பால்
அப்பனே இட்டுவைக்கத் தெளிந்துபோகும்
வேமப்பா வன்னீரில் சாதிலிங்கம்
விதமாகச் சுருக்கிடவே கட்டிப்போகும்

நாமப்பா வெள்ளியிலே வேதையாகும்
நலமான தங்கத்திற் சேர்ந்துஆடும்
ஓமப்பா யிக்குருவை யண்டத்துள்ளே
யுருக்கவே வகைக்குக்கால் வராகன்போடே. [139)

போட்டதனை வெயிலில்வைக்க மெழுகுமாகும்
புகழான பாஷாண மெல்லாஞ்சாகும்
ஈட்டவுள்ள லோகமெட்டில் வேதையாகும்
இதுபோலச் சுறுக்குள்ள போக்கொன்றில்லை
நாட்டமுடன் இக்குருவை வைக்கவேண்டாம்
நலமான பச்சையடர் பூநீர்ச்சுண்ணத்
தேட்டமுட னித்தொழிலை முன்னேசெய்து
செயலான லோகத்தி லிருந்துதேறே. (140)

வினையகற்றல்.

தேறுதற்கு யின்னமொரு கருவைக்கேளு
செப்பாத கருவையெல்லாஞ் செப்பினேன்கேள்
யேறுதற்கு மலையொன்று மில்லையப்பா
யிறந்துநீ பிறவாதே பிறவாதேநீ
கூறுவதே சத்தியமே பொய்யாகாது
கொலையொன்று மாகாது கொடுமையாகா
வேறுதுறை யேதுமில்லை வழலையாதி
வேதாந்தக் கருவுக்கு மனமதாமே. (141)

தீக்ஷையிரண்டுக்குங்காலம் சூரியன் தோற்றம்.

ஆமப்பா மனமுருகச் சித்தியாச்சு
அறிவுகொண்டு சிவயோகத் தடுத்துநோக்கித்
தாமப்பா சிவதீட்சை சத்திதீட்சை
சாதகமாய் காலைசிவ மாலைசாத்தி
போமப்பா யிரண்டுக்கு மிடைகலைதான்சித்தி
போக்கோடே மவுனமுத்தி பூண்டுநோக்க
வேமப்பாமூலத்தி மேலேசாடும்
வெளிகோடி சூரியன்போ லுள்ளேகாணும். (14

சிவத்தின்கூறு சத்திகூறு.

காணுதற்கு பவுனமுற்றுப் பாருபாரு
காசினியில் விசாரமெல்லாந் தள்ளுதள்ளு
வீணப்பா விசாரமென்ன சமுசாரமென்ன
வெட்டவெளி யொன்றுமில்லை சிவத்தின்கூறு
தோணுகின்ற ரூபமெல்லாஞ் சித்தியாகுஞ்
சுருதிமுடி வீதிரண்டு மல்லாதுண்டோ
ஊணுகின்ற பஞ்சகர்த்தா வெல்லாமாச்சு
வுறுதியிந்தக் கருவின்றி வேறேதாதே. (143)

சடவாழ்க்கை.

ஓதுவது வேதமே யோதவேணும்
உலகத்தில் வேதமில்லா தொன்றுமில்லை
மாதுமக்க ளென்றுதா மெண்ணியெண்ணி
மாள்வதற்கும் பிறப்பதற்கும் வைத்தானீசன்
தீதுவென்ற தீயினிலே விழுந்தாயானல்
செடம்விழுந்து போகுமடா ஞானமேது
தாதுவென்ற சடமிருந்தால் ஞானம்வாய்க்குஞ்
சகலகலைத் தியானமெல்லாந் தருதும்பாரே. [144)

நூலின் மகத்துவ முறைத்தது.

பார்ப்பதற்கு இந்நூலே பார்க்கவேணும்
பரிபூரண சூஸ்திரமாய்ப் பாடினேன்யான்
தீர்ப்பதற்கு வினைகளெல்லாந் தீட்சைசொன்னேன்
செயமான கற்பமது தெளிவாய்ச்சொன்னேன்!
கூர்ப்புடனே வாதத்தின் விபரஞ்சொன்னேன்
குகைகளெல்லாந் தீர்த்துவிட்டேன் கூர்ந்துபாரு
சூர்ப்பனகி யாசைகொண்டே யெல்லாம்போச்சு
சுருதியுள்ள கெடியனென்று லெல்லாமாச்சே. (115)

லோகத்தோ டொத்துவாழ்தல்.

ஆச்சிந்த லோகத்தி லிருக்கும்போது
அசலருடன் கூடியா ணவம்பேசாதே
நாச்சிந்த வுலகத்தில் நடக்கலாகா
நடந்தாலும் மவுனத்தே தூங்குதூங்கு

காச்சந்த மவுனத்தை விட்டாயானல்
கருவிகடான் கொல்லுமடர் தியானம்போச்சு
மூச்சென்ற யோகமுதல் ஞானம்போச்சு
முறையோடே யிருக்கவென்றால் குகையைக்காரே. [146)

சித்தரேன்போர் நெறி.

கார்ப்பதுதான் பூரணத்தைக்கார்க்கவேணும்
காரென்று புருவமையத் திருக்கவேணும்
தீர்ப்பதுதான் வாசனையைத் தீர்க்கவேணுஞ்
ஜெகமொன்று மில்லையென் றெண்ணவேணும்
ஆர்ப்பனத்துக் கழிவில்லா திருக்கவேணும்
அப்பவல்லோ சித்தனென்ற ஆண்மையாச்சு
நாற்பதுக்குள் கற்பமுண்ணக் கோடியாச்சு
நரைத்தாக்கால் நாளதிகம் செல்லுமன்றே. [147)

வருட நிலை

நன்றாக நாளதிகஞ் சென்றாலென்ன
நாட்டிப்பார் வருடமொன்றில் சித்தியென்று
பன்றான ஆண்டதுதான் பத்துக்குள்ளே
பரிவான காயசித்தி யோகசித்தி
உன்றான கெவுனசித்தி ஞானசித்தி
உரப்பான சட்டைதள்ளிக் காந்தியாகும்
ஒன்றான தேகமது வரூபமாகும்
முத்தமனே கத்திநடு வோடும்பாரே. (148)

சட்டை கழலுமார்க்கம்

ஓடுகின்ற தத்துவந்தான் தொண்ணூற்றாறு
மோர்கருவிக் கோர்சட்டை யுரிந்துதானல்
சாடுகின்ற பிறவியெல்லாந் தள்ளிப்போச்சு
சாயுச்சிய பதவியிலே சார்ந்துபோச்சு
பாடுகின்ற வேதாந்தம் வெளியாய்ப்போச்சு
பரிபூரணந் தானச்சு பகலுமாச்சு
வேடுவன்று னெடுத்தபுழுத் தன்ரூபங்கொண்ட
விதமாச்சு மாய்கையெல்லாம் வெளியுமாச்சே. (149)

ஆச்சப்பா வாதத்தின் கருவைக்கேளு
வப்பனே வாயிரத்தி னூறுக்குள்ளே
பேச்சப்பா சகலகலை செய்தியெல்லாம்
பேசாத கருவையெல்லாம் பேசிவைத்தேன்
போச்சப்பா பேசிவைத்த கருவேதென்றால்
புகழான சவுக்காரப் போக்குத்தாக்கு
யேச்சப்பா முப்பூவின் தீட்சைமார்க்கம்
இயலான கடுங்காரச் செயநீர்போக்கே. (150)

நூல்தொகை விரிவுரைத்தல்

போக்கான சுண்ணத்தின் கருவுஞ்சொன்னேன்
புகழான செயநீரின் கல்லுஞ்சொல்லி
வாக்கான களங்கோடு செந்தூரங்கள்
வகையான திராவகமுஞ் சரக்கின்வைப்பும்
தாக்கான கருவோடு குருவுஞ்சொல்லி
சாதகமாங் கைபாகஞ் செய்பாகங்கள்
தூக்கான இடைபாகம் பர்சைபாகஞ்
சுறுக்காகுந் தாகமொடு தேகமெண்ணே. (151)

எண்ணவே ஞானமொடு மூலிகையின்கூறு
மியல்பான கைபாகமெல்லாஞ்சொன்னேன்
வண்ணமர் மெக்தெந்த நூல்களெல்லாம்
வாகான நிகண்டுமது மருவிப்பாரு
பொன்னான பொன்னதுபோ லிந்நூலுந்தான்
போக்கொன்றுந் தப்பாது மறைக்கவில்லை
நன்னயமாஞ் சாத்திரத்தில் மறைத்தேனென்று
நாட்டினேன் வெளியாக நாட்டினேனே. (152)

கயவர்நிலைமை.

நாட்டிலே யிப்படித்தாள் வெளியதாக
காட்டியுந்தா னறியாட்டா லென்னசெய்வோம்
பாட்டிலே சொன்னதொன்றும் பலியாதென்றும்
பாவிகள்தா னெடுத்துரைப்பார் பழமையல்லால்

வீட்டிலே யிருந்துகொண்டு வீண்வாய்பேசும்
வெள்ளாட்டிப் பயல்களுக்கு சாத்திரமெய்யோ
தேட்டிலே சாத்திரத்தைத் தேடவேணுந்
திரவியிலே மனமிருக்கச் சித்தியாமே. (153)

பூஜையில் தாயைநினைத்தல்.

சித்திக்க வேணுமென்றால் சொல்லக்கேளு
செகசால மாடுகிற தாயைக்கேளு
புத்திக்கு மவள்பதத்தைப் பூசைபண்ணு
போக்கொன்றுந் தப்பாது பொய்போகாது
முத்திக்கும் பூசைமுறை தன்னைக்கேளு
மூண்டதொரு சமாதிக்கு ளகிரிவேணும்
பத்திக்கு மூதண்ட லேகியந்தான்
பாங்கான லகிரியப்பா சட்டமாமே. (154)

தங்கை வரமீய்தல்.

சட்டமாங் கற்பத்துக் குறுகியாகுந்
தாயோடு தந்தைக்குப் பிரிதியாகும்
இட்டமாம் வாமத்தைக் கொண்டாயானு
லெடுத்ததொரு அரையெல்லா மிடறிப்போகுந்
தொட்டதொரு பூசையிலே வாமம்வைத்து
சுகமாகப் பூசிக்கச் செலமதானல்
அட்டமா சித்தியது வாச்சுதப்பா
ஆத்தாளா மப்பனுக்கு மாச்சுதெண்ணே. (155)

விவேகதாட்சி.

ஆச்சுதேயோகத்துக் கேணியாச்சு
வப்பனே கற்பத்துக் கர்காதாகும்
வாச்சுதே யென்றுசொல்லி வாமங்கொண்டு
மதிமயங்கி வாய்புலம்பி மயங்கிப்போனல்
யேச்சுதே சாபமது தீரவில்லை
யேமமென்ற வித்தையது யெய்தவில்லை
காச்சுதே யறிவென்ற ஞானம்போச்சு
கசுமால வாதியென்ற கழுதைதானே. (156)

பச்சைப்பூர வைப்பு.

தானென்ற கற்பூரஞ் சொல்லக்கேளு
சாதகமாம் பரங்கிவைப்புக் கிடையாதப்பா
யேனென்ற சூடனது பலந்தானென்று
யியல்பான வெடியுப்புப் பலமுக்கால்தான்
சேனென்ற வுவர்ப்பூவும் பலமதொன்று
சேரதிலே கழஞ்சியொன்று புழுகுகூட்டி
வானென்ற ஆவின்னெய் விட்டரைத்து
வைத்துநீ குப்பியிலே சீலைசெய்து. (157)

செய்துமே வாலுகையில் தீயைமூட்டு
சுகமாக முத்தீயு மூன்றுசாமம்
எய்துமே தீயாற்றி யெடுத்தாயானல்
இளந்தேங்காய்க் காய்போல்தா னிருக்கும்பூரம்
கொய்ததொரு குங்குமப்பூ வாசம்போலக்
குணமாகும் பச்சையென்ற பூரந்தானும்
எய்துமே யளப்பாகும் வாதத்துக்கு
மிதுவாதி குருவாகு மிசைந்துபாரே. (158)

பாரப்பா இன்னமொரு சேதிகேளு
பரிவான வீரத்தின் வைப்பைக்கேளு
நேரப்பா கடைதனிலே விற்கும்வீரம்
நோகப் பலமொன்று எடுத்துக்கொண்டு
சேரப்பா வதினேடு துரிசிசீனஞ்
செய்ததொரு நவச்சார மன்னபேதி
ஊரப்பா கறியுப்பு யுவருப்போடு
உறவான வெடியுப்புப் பலமூங்காலே. (159)

காலாக இதுவெல்லாம் பொடித்துக்கொண்டு
கருணைபெற வேணுமென்று குப்பிக்கேற்றி
நாலாக முத்தீயு மாறுசாமம்
நலமாக வெரித்ததனை வாங்கிக்கொண்டு

பாலான தேங்காய்போ லுருகிநிற்கும்
பண்பாக வுடைத்ததனை வைத்துக்கொண்டு
சேலாக முன்போலே நிறுத்துக்கொண்டு
சேர்த்துநீ பொடித்தெடுத்துக் குப்பிக்கேற்றே

வீரத்தின் மகத்துவம்.

ஏற்றியே முன்போலே எரித்துவாங்கு
இப்படியே மும்முறையி லிருக்கும்வீரம்
தேற்றியே இவ்வீரஞ் சகலத்துக்குந்
திறமான குருவடா வீரராசன்
நீற்றினமு முருக்கினங்கட் டினமுங்கோடி
நேரான செந்தூரக் களங்குகோடி
வீற்றியே செயநீருந் திராவகமுங்குருவும்
மேலான சாரணையும் வீரமாமே. (161)

சித்தருக்குண்டான நாலுவித்தை விபரம்.

வீரமாஞ் சித்தருக்குச் சொல்லக்கேளாய்
வித்தையிலே நாலுவித்தை மேலாம்வித்தை
வாரமாம் வாதமொடு வசியமாற்றம்
வளமான அஞ்சனமும் வரவும்வேணும்
ஆரமா மிதுநாலு மில்லாவிட்டால
அலைவாகுஞ் சித்தருக்கு ளடுக்கமாட்டார்
பாரமாம் வாதமொடு வசியஞ்சொன்னோம்
பார்ப்போர்க்கு அஞ்சனமும் மாற்றம்பாரே. (162)

மாத்தமை.

மாற்ற மென்றவித்தைக்கி வகையைக்கேளாய்
வால்நீண்ட கருங்குருவி யில்லாவிட்டால்
தோற்றுகின்ற காமரூபி பிணை.ச்சல்பார்த்துச்
சுருதியாய் பிடித்துவந்து சொல்லக்கேளாய்
ஏற்றுகின்ற வெவ்வேறு சட்டியிட்டு
யெரித்துநீ வறுத்திடுவாய் கருகமட்டும்
போற்றுகின்ற யழிஞ்சியின்வேர் கொண்டுகிண்டி
பொடியாக்கிக் கரிப்போலே வறுத்துக்கொள்ளே. (163)

அழிஞ்சில்தைலம்.

வறுத்தகரி தனையரைப்பாய் தயிலங்கொண்டு
வாகான தயிலத்தின் வளமைகேளாய்
பொறுத்ததொரு யழிஞ்சிவிரைத் தயிலஞ்செய்து
புதுமையுள்ள தயிலமது விட்டுமத்தி
செறுத்தவிதைப் பொடிசெய்து கலசத்திட்டுத்
தீயான சூரியன்றன் முகத்தில்வைக்கக்
கறுத்ததொரு தயிலமது விறங்கும்போது
கரியுடனே சேர்த்தரைத்துச் சிமிழில்வையே. (164)

வசியம் கருங்குருவிமை குழியானைமை.

வைத்ததனைத் திலதமிட வசியமாகும்
மாற்ற மாங்தேகமது ஆர்க்குங்காணு
உத்ததொரு கருங்குருவி யிதுபோற்பண்ண
உறுதியாங் திலதமது வுண்மையாகுஞ்
சித்தியுள்ள குழியானைச் சிரங்கையொன்று
செய்திடவே முன்போலே சித்தியாகும்
புத்தியுள்ள பேர்களுக்குப் பிழைக்கச்சொன்னேன்
புதுமையுள்ள வஞ்சனத்தைப் புகலக்கேளாய். (165)

அஞ்சனமை.

கேளப்பா அஞ்சனத்துக் கஞ்சனப்பாஷாணங்
கிடையாது பறங்கிவைப்புக் கொடுக்கமாட்டான்
நாளப்பா நாட்டிலுள்ள கருவைக்கொண்டு
நாட்டுகிறே னஞ்சனத்தை நன்றாய்க்கேளு
வேளப்பா கருங்குருவி சிவந்ததொன்று
விதமான பச்சோந்தி யுடும்புகாக்கை
சூளப்பா பச்சைபாம் பரணைபூநாகஞ்
சோதியொத்த யிந்திரமாங் கோபப்பூச்சி. (166)

மணற்தளைத் தயிலம்.

பூச்சியென்ற வகையெல்லா முழுதுமாகும்
புகலுகின்ற மற்றதெல்லாங் தலைகளாகும்;
ஆச்சியென்ற திதுவெல்லா முணர்த்தித்தூளா
யாக்கியே பறணியிலே யடைத்துக்கொண்டு

வாச்சிதென்ற மணற்தவளைத் தயிலஞ்சொல்வேன்
மைந்தனே நூறுதானெடுத்து வந்து
காச்சிதென்ற வெயிலிலே யுலர்த்திக்கொண்டு
காட்டிஞ மணக்குமுத்துக் காரெள்ளோடு. (167)

திரிசெய்விதம்.

எள்ளோடு அழிஞ்சில்விரை யிடித்துக்கொண்டு
இதமாகக் குழித்தயில மிறக்கியேதான்
விள்ளாதே பறணியிலே யடைத்துக்கொண்டு
மேன்மையாம் பெண்ணுடைய விலக்கச்சீலை
தள்ளாதே சாணிகளஞ்சி சதுரமாகத்
தானெடுத்து வதில்முன்றாள் பரப்பியேதான்
கொள்ளமட்டுங் திரிபோலே யுருட்டிக்கொண்டு
குணமான வெள்ளெருக்கின் நூலைச்சுற்றே. (168)

மைவாங்கும்வகை மைபார்க்குப்பருவம்.

சுத்தியதோர் திரியதனை விளக்கிவிட்டுச்
சுகமான முன்றயில மதனில்வார்த்துப்
பத்தியாங் காராமை யோட்டுக்குள்ளே
பத்துகின்ற மையதனைப் பறண்டிக்கொண்டு
வெத்தியா முன்தயிலம் புத்துத்தேனும்
விதமாகச் சரியிடையாய்க் கூட்டிமத்தி
சித்தியாம் பதினாறு வயதுசென்ற
செல்வர்கையி லிட்டிடவே தெரியுங்தூரம். (199)

அஞ்சனத்தின் குணம்

தூரமது நாழிகைக்குள் பாதாளத்திற்
சூட்டிவைத்த தனங்களெல்லாங் தோணலாகும்
காரமது ஆர்கையி லிட்டாலுந்தான்
கைகடந்து காணுமடா அதீதமைதான்
வாரமது வானபேய்க் கணங்களெல்லா
மாறிவிட்ட மந்திரங்க ளொன்றும்வேண்டாஞ்
சூரையாம் பேய்களுக்குக் கருவதொன்று
சொல்லுகிறேன் கழுதைநெய்யின் சுறுக்குத்தானே. (170)

பூதவிலக்கத்தயிலம்.

சுறுக்காக யிருக்கவென்றால் சொல்லக்கேளாய்
சுருதியாங் கழுதையுட கொழுப்பைவாங்கி
யிறுக்காக உருக்கிநெய்யை யெடுத்துக்கொண்டு
யிதமான தலங்களிலே தீபமேற்று
உறுக்கான பேய்பூத மோடிப்போகும்
உண்மையிது சொல்லிவிட்டே னுலகுள்ளோர்க்குத்
தறுக்கான வாதவித்தை வருமுன்னாகத்
தாரணியிற் செய்துகொண்டு தபசுபண்ணே. (171)

தனங்களிருக்குந்தலம் அழகர்மலை.

பண்ணயிலே தனங்கிடைக்குந் தலங்கள்சொல்வேன்
பாரிலே யலையாதே பாங்குகேளாய்
உண்ணியதோர் மதுரைக்கு வடகிழாக
வுறைக்கிறே னழகர்மலை யுயரத்தானும்
கண்ணயிலே சுனையருகில் விருக்ஷமொன்று
நலமாக வதின்கீழே சுனைதானென்று
உண்ணயிலே யருவியுட வூறலப்பா
வுலகத்தோ ராடுவார் தீர்த்தமென்றே. (172)

சித்தர்வைப்பு

தீர்த்தமென்ற வச்சுனையில் கிடாரமொன்று
செயமான ஆயக்கால் தன்னில்தூங்கும்
நீத்தமென்ற வோராளுக் குள்ளேயப்பா
நேரான சித்தர்வைப்பு நெடுங்காலமாச்சு
காத்தமென்ற காயசித்தி செய்யவேண்டில்
காசினியி லதையெடுத்துச் செலவுசெய்து
வாத்தமென்ற கற்பமுண்டு வாழ்வோர்க்காகும்
வையகத்தோ ராசைவைத்தால் வாயாதென்னே (173)

மயிலாடு மலையில் கார்த்திகைவீர வாசன்வைப்பு.

வாய்க்கவின்னஞ் சொல்லுகிறேன் மதுரைக்குமேற்கே
மலையொன்று மயிலாடும் போத்தையென்பார்
பாக்கியமா மம்மலையிற் கிணறொன்றுண்டு
பாரப்பா வதிலிறங்கிப் பாருநீதான்

தாக்கியதோ ரிரண்டாளின் தாழப்போனல்
　　தங்கமென்ற பாளமது நிறையவுண்டு
காக்கியதோர் பாளத்தை எடுத்துக்கொண்டு
　　கார்த்திகைவீர வர்ச்சுனன்ருன் வைத்தவைப்பே. (174)

ஷைநாகமலையில் சித்தர்வைப்புச் செந்தூரம் குகை கதவுதிறக்க

வைப்பான பவனுச மலைக்குமேற்கே
　　மைநாக மலையொன்று அதற்குப்பேரு
செப்பான குகையொன்று வதிலேயுண்டு
　　செந்தூரக் காடப்பா சித்தர்வைப்பு
மெய்ப்பான குகைவாசல் திறப்பதற்கு
　　விதமொன்று சொல்லுகிறேன் விரும்பிக்கேளாய்
ஒப்பாகச் சொன்னஉச் சாடனஞ்செபித்து
　　உணர்வாக நூற்றெட்டு உருத்தான்சார்பே. (175)

செந்தூரப்பதம் பக்குவம்.

சார்பாகச் செபித்திட்டால் திறக்கும்பாரு
　　தயவாக வதினுள்ளே சென்ருயானல்
ஆர்வாகக் கோடிசெப்பில் செந்தூரங்கள்
　　அட்டலோகம் பழுக்கும் வேதைமார்க்கம்
பேராக மண்டலங்கொள் காயசித்தி
　　பிணியான தணுகாது வயித்தியத்தின்மார்க்கம்
ஆர்வான கெவுனசித்தி குளிகைசித்தி
　　அட்டமா சித்திமுத லாடும்பாரே. (176)

கதவடைக்க—கருமலை

பாரப்பா வதிலிருக்குஞ் செந்தூரத்தைப்
　　பரிந்துனக்கு வேணமட்டு மெடுத்துக்கொண்டு
சேரப்பா கதவதனை யடக்கவேண்டிச்
　　செபித்திடுவாய் நூற்றெட்டு தம்பனந்தான்
ஆரப்பா கதவதனைத் திறக்கப்போருர்
　　அறையுகிறே னின்னமொரு வதிசயந்தான்
காரப்பா களக்காட்டின் மேற்கதாகக்
　　கருமலையொன் றம்மலையில் சுனைதானென்றே. (177)

கருமலையில் தயிலவைப்பு

ஒன்றான சுனையருகிற் கிணறொன் றுண்டு
உத்தமனே தயிலமது நிறையநிற்குங்
கன்றான தயிலத்தைக் கலசந்தன்னில்
காணப்பா முகந்துகொண்டு கருவைக்கேளாய்
கன்றான இரும்புசெம்பு லோகமெட்டில்
நாட்டினால் தங்கமது நலமதாகும்
உண்டான செய்தியிது யின்னங்கேளாய்
உரைக்கின்றேன் வெளியாக வுரைக்கின்றேனே (178)

நம்பிமலையருகில் விபூஷணர் வைப்பு தங்கக்காசு

உரைக்கின்றே னம்பிமலை நம்பிக்கோவி
லுற்றதொரு சந்நிதிக்குக் கிழக்கதாக
நிறைக்கின்றேன் மலையருகில் குத்துக்கல்லு
நிற்குதடா வதனடியில் தங்கக்காசு
கரைக்காசுங் கற்குழிதா னொன் றுக்குள்ளே
கனகமென்ற காசதுதான் கோடியுண்டு
திரைக்கின்றேன் மூடிக்கல் செய்துமூடி
திறமாக யிருக்குமடா திறக்கொண்ணாதே. (179)

கலவுதிறக்கத் தியானம்

ஒன்றான கல்திறக்கும் வகையைக்கேளாய்
உற்பனமாய் வயிரவரைப் பூசித்தேதான்
நன்றான வயிரவன்றன் தியானமோத
நலமான மூடிக்கல் திறந்துபோகும்
பன்றான கனகத்தை யெடுத்துக்கொண்டு
பரிவான மூடிதன்னை யடைத்துப்போடு
வின்றான விபூஷணர்தான் வைத்தவைப்பு
மேதினியில் நடவாதே மலையிலேறே. (180)

மருந்துமலை.

ஏறுதற்கு இன்னமொரு வகையைக்கேளாய்
இயல்பான குமரிக்கு மேற்கேயப்பா
கூறுவா றுலகத்தோர் மருந்துமலையொன் று
குறித்துவைத்த மருந்துதனை யறியமாட்டார்

தேறுவா யம்மருந்தை யறிவதற்கு
செய்தியொன்று சொல்லக்கேள் மேற்கதாக
ஏறுவா யம்மலையி னுச்சிதன்னில்
இருக்குதடா சுனையொன்று யிருக்கும்பாரே. (181)

பனைப்பாஷாண வேதை

இருக்கிற சுனைக்குள்ளே பனைப்பாஷாணம்
இயல்பான பனங்குலைபோல் கிடக்கும்பாரு
அருக்கின்ற குலையதனை யெடுத்துக்கொண்டு
அழகான தீயிலிட்டுச் சிவக்கக்காச்சி
பருக்கின்ற வெள்ளாட்டின் பாலிற்போட்டால்
பாதியிரு கூராக வெடித்துப்போகுங்
குருக்கொண்ட பாஷாணி சவுரிபோலக்
கோழிமுட்டைக் கருப்போன்ற கொள்கைகாணும். (182)

மருந்துமலையில் தயிலமிருப்பிடம்-அனுமார் வைப்பு

காணுகின்ற பாஷாணங் கழற்றிவாங்கிக்
கால்பணமா யேற்றவிடு கற்பமாகுந்
தோணுகின்ற பாஷாண வகையிற்றேய்த்து
சுகமான காரமிட்டு உருக்கிவாங்கிப்
பூணுகின்ற நவலோகந் தன்னிற்பூட்ட
பொன்னாகும் பத்தரையும் பொய்யாதப்பா
கோணுகின்ற வதனடுக்கக் குகையொன்றுண்டு
குகையினுட பாகத்தில் வாசலுண்டு (183)

வாசல்திறக்க நவகோண பூஜை

வாசலது காணும லடைத்துப்போட்டார்
மகத்தான சித்தருட மாய்கைமாய்கை
ஊசலென்ற கதவதுதான் றிறப்பதற்கு
உபாயமொன்று சொல்லுகிறே னுண்மையாகக்
காசலையா யம்மலையி லிருந்துகொண்டு
கருதியே நவகோண வாலைபூசை
யேசலுட நாற்பதுநாள் பூசித்தாக்கால்
ஈஸ்பரியாள் கிருபையினால் வாசற்காணும் (184)

கிருபையினுல் வாசலது திறந்ததாஞல்
கேளப்பா வதனுள்ளே நுழைந்துபாரு
உறுதியுள்ள வீடதுபோல் விசாலங்காணும்
ஒருபக்கத் தொருகிணற்றில் தயிலம்நிற்கும்
பொரியென்ற அத்தயில மொண்டுகொண்டு
பூரணமே யென்றுசொல்லி பூசித்தேதான்
மறுபடியுங் கதவைத்தா னடைத்துப்போட்டு
வந்திருந்து செய்கின்ற மார்க்கங்கேளே. (185)

தயிலம் வந்தமார்க்கம்

மார்க்கமந்தத் தயிலம்வந்த வகைதான்கேளாய்
மாருதிதான் மருந்துமா மலையிற்சென்று
சேர்க்கையிலே கொண்டுவந்தார் ஸ்ரீராமர்பேரில்
செத்தவர்க ளனையெழுப்புஞ் செய்கையாலே
போர்க்களத்தில மடிந்தவர்கள் பிழைத்தபோது
போகாதே வாங்கிவைத்தார் புதுமையாக
மார்க்கமுள்ள தயிலமது கொண்டபேர்கள்
மகத்தான சித்தரடா ஆதியாமே. (186)

ஆமிந்தத் தயிலத்திற் பணவிடைதான்கொள்ள
ஆதிசதா சிவன்வரைக்கு மிருத்தும்பாரு
ஓமிந்தத் தயிலமது யார்க்குக்கிட்டும்
உறுதியுள்ள சித்தரென்று லபிக்கும்பாரு
வாமிந்த சாத்திரந்தான் கிடைத்தபேர்க்கு
மறுபிறவி யில்லைமகத் தானசித்தன்
சோமிந்து தரித்தசிவன் சொன்னமார்க்கஞ்
சொல்லிவிட்டேன் வெட்டவெளி யாகத்தானே. [187]

தோற்றமெய்தல்

வெளியாகத் தோணுதற்குக் கருவைக்கேளாய்
வேதாந்த நூல்களெல்லாம் வரைந்துபாரு
ஒழியாத ஆசையெல்லா மொழித்துப்போடு
ஊடுருவச் சுழிமுனையை யூணிப்பாரு

வழியோடே கற்பமுண்ண மார்க்கம்பாரு
வாதவித்தை செய்வதற்கு வகையைப்பாரு
தெளிவாக வருதற்குத் தீட்சைபாரு
ஜெகசாலக் கூத்தெல்லாஞ் சேரப்போக்கே. (188)

கோங்கணர் பெருமை.

போக்கான சாத்திரங்க ளொன்றுமில்லை
பூரணத்தி னூல்போலே சொல்லாதொன்றும்
நோக்கான கொங்கணர்சொல் கடைக்காண்டத்தில்
நுணுக்கங்க ளதிகமுண்டு கண்டுபாரு
வாக்கான விந்நூலு மந்நூலும்போல்
வகைவிபர மாயொன்றும் விளக்கவில்லை
தூக்கான தூக்கெல்லாஞ் சொல்லிவிட்டேன்
சோதித்தால் தெரியுமடா சுருதிசொல்லே. (189)

நூல்மகத்துவம்.

சுருதிகண்டால் சுருதிகொண்டு யேறவேணுந்
துன்மார்க்கர்க் கிந்நூலைச் சூட்டலாகா
பருதிகண்ட பனிபோலே வினைகள்நீங்கும்
பாரிலுள்ளோர்க் கிந்நூலைப் பகரவேண்டாம்
கருதாம லிந்நூலை யீய்ந்தாயானல்
கயிலாச சித்தர்வந்து சபிக்கச்செய்வார்
ஒருத்தராய்க் கண்டுகொண்டு மனத்துள்வைத்து
உருத்துடனே வந்துவிடு மலையின்மீதே (190)

மீதான மலைகளிலே யேறினாலும்
விருதாகு மில்நூலைக் கைவிடாதே
வாதாடுஞ் சித்தர்வந்து யெதிர்த்தாரானல்
மறவாம லிந்நூலை யெடுத்துப்பேசு
ஓதாமல் வாய்பிதற்றி யோடுவார்கள்
ஞானக்குத்தா னெதிராரு முண்டோவென்று
ஆதார மானதொரு கருவெல்லாந்தான்
அரைந்ததினல் பூரணநூ லானவாறே. (191)

குழிக்கல்லளவு.

வாருன குழிக்கல்லின் மார்க்கங்கேளாய்
மைந்தனே பிரமாவின் சிரசுபோலே
கூருன வகலமணி விரல்முப்பத்துங்,
கொள்கையாம் நிகளமணி விரல்நால்பத்து
வீருன விழும்பதுதான் விரலிரண்டு
வீதியிலே யாழமது விரலிரண்டு
பேருன இருபுறமு மூக்குமாகும்
பெரிதான குழவியைத்தான் பேசுவேனே. (192)

பிரம்பளவு-சேபமாலைக் கணக்கு.

பேசுகின்றேன் பதினலங் குலமாம்நீளம்
பெரிதான வட்டமணி விரல்நால்வீதி
ஆசுநேரிம் மிடியங் குலம்பத்தாகும்
ஆவிடையுஞ் சிவலிங்க மானவாறும்
வீசுகின்ற பிரம்பதுதான் மொழியைந்தாகும்
வேதாந்த நீளமது விரல்பத்தொன்று
ஈசுரன்றன் வகுத்தருளுங் கணக்கீதப்பா
யேற்றசெப மாலைபதி னறுமுகமஞ்சே. (193)

சித்தர்வேடமறிய.

அஞ்சாகும் ஆருகும் அதீதமாகும்
அணிவிரலால் யோகதண் ரூறுமாகும்
பஞ்சாட்சரக் கவசகுண் டலந்தான்கேளு
பரியினுட செம்பதிகம் பளிங்கதிகமாகும்
மஞ்சாடி பதினென்று பதினருகும்
மக்களே யிருபுறமு மகிழ்ந்துகொள்ளு
நெஞ்சுறத்துக் காகுகிற யோகவெட்டி
நெடுநீளந் தொண்ணூற்ரு றங்கலமாம்நேரே. (194)

கயிலாயவர்க்கம் அறிய

நேரான வீதிநால் விரலேயாகும்
நிஷ்டைக்கா சனம்புலியா சனமுமாகும்
கூருன ரசலிங்கம் பூசையாகும்
கோவணந்தான் பூங்காவிக் கடகங்கையிற்

சீரான ரசக்குளிகைச் செபமாலைக்குத்
செகமதனில் கிடையாது செபவிசேடம்
பேரான கைச்சரசந்தான் உப்புமணியப்பா
பேசரிய கயிலாய வர்க்கத்தோர்க்கே. (195)

வர்க்கத்தின் பெருமை யறிதல்.

வர்க்கத்தி லதிகமடா சிவயோகந்தான்
வண்மையுள்ள மெய்ஞ்ஞான மார்க்கம்ரெண்டு
சொர்க்கத்தில் சொர்க்கப்பேர் பெறவுனக்குத்
தொல்லுலகில் மனிதரோ டுறவுமுண்டோ
கார்த்திக்கக் கர்க்கமென்ற கசடர் தங்கள்
கையிலே யேற்பதுதான் மிகவுங்கொஞ்சம்
மார்க்கத்தி லாகவுன்னை வணங்கவேணும்
வணங்காமற் போனதென்ன வறிந்துகொள்ளே. (196)

சிவயோகம் மெய்ஞ்ஞானி மார்க்கம்.

அறிவான பேரின்பத் தடுத்தானாகில்
அசைவையென்ற தீட்சைபத்து மறிந்தானாகில்
குறியான சிவயோகங் குறித்துக்கண்டார்
கோமளையாம் பராபரைநிர்க் குணத்தைக்கண்டார்
பிரியாமல் சிவனுடைய வெளியைக்கண்டார்
பேரான சிவயோகி ரிஷிமெய்ஞ்ஞானி
நெறியான விதற்கெல்லா மறிவேயாசான்
நினைத்துமக்க ளொருமனதாய் நிலைத்திடரே. (197)

யோகத்துக் கதிகாரி.

நிலைத்திட ரென்றாலும் நிலைக்கமாட்டான்
நீடுலகில் கோடியிலே யொருவனப்பா
கலைத்திட ரென்றாலுங் கலைக்கப்போகா
கனத்தகல முள்ளதொரு ராசிசேர்ந்தோர்
மலைத்திட ரென்றாலு மலைப்பானோதான்
வச்சிரம்போ லறிவுடைய மக்காள்மக்காள்
உலைத்திட ரென்றபுத்தி யுலகிலுள்ளோர்
ஓகோகோ ஒருகோடி உலுத்தர்காணே. (198)

கர்மி போய்வேடர் நிலை.

காணுவேன் வாதமென்பார் யோகமென்பார்
கற்பமுண்ணப் போறேனென்பா ருண்டேனென்பார்
பூணுவேன் தீட்சைபத்தும் பெற்றேனென்பார்
பூரணநூல் பாராத புலையரப்பா
தாணுவாய் நின்றபரஞ் சோதிகாணாற்
சதாசிவன்றான் வந்தாற்போல் பூசைசெய்வார்
ஆணுவத்தா லலைந்துகெட்ட மட்டைப்பேச்சை
யடுத்துநின்று கேளாதே யகலப்போவே. (199)

சித்தர் மரபுளோர்க் குரைத்தல்.

போவென்று சொன்னதுதா னுரைமைந்தா
புகழ்பெரிய சித்தருட மரபுள்ளோரைக்
கூவென்று தர்க்கமிடு மூலகமாண்பர்
கூட்டுறவை விட்டுவிடு குன்றிலேறு
தேவென்று சித்தருடன் சேரவேணுஞ்
செப்புவார் வேதாந்தந் திறந்துசொல்வார்
ஆமென்று வலையாதே கற்பங்கொள்வார்
அப்பனே யோகமுற்று லதீதப்பேறே. (200)

பேறறிதல்.

பேறென்று சொல்வதுதான் ஞானப்பேறு
பேசரிய வேதாந்தம் பெற்றபேறு
நூறென்று பூரணநூல் பார்த்தபேர்கள்
நுண்மையென்றுஞ் சிவயோகத் திருந்தபேரும்
வாறென்ற காயசித்தி யானபேறு
மகத்தான தீட்சைவிதி யறிந்தபேறு
ஓறென்ற வமுர்தமதை யுண்டபேறு
ஓகோகோ கெவுனசித்தி யுறுதிப்பேறே. (201)

வயிராக்கியம்பூணல் ஆக்கை நிலையாமை.

உறுதியா மித்தனைக்குங் கருவேதென்றால்
உத்தமமா மனமல்லோ விதற்குமூலம்
பொறுதியாங் குணம்வந்து சாந்தமானல்
பூலோக மாய்கையெல்லாம் விட்டதானூற்

சுருதியா மனமுருகி நிரர்சையானல்
சொல்லொன்றுந் தப்பாது சித்தியாச்சு
விருதாவி லலைந்தலைந்து ஞானம்பார்த்தால்
வேரற்ற மரம்போலே விழுந்துபோமே. (202)

பெரியோர் பெருமை.

வீழ்ந்திறந்து போகின்ற பேரேயல்லால்
மெய்ஞ்ஞானம் வந்தவர்கள் காணரப்பா
சூழ்ந்திருந்த வண்டமெல்லாஞ் சோதித்தாக்கால்
சுகிர்தவான் கோடியிலே யொன்றுகாணும்
வாழ்ந்திருந்த வுலகத்தே யிருந்தாலுந்தான்
மானிடரி லொருவனடா வறியப்போகா
தாழ்ந்திருந்த தன்மையுற்றுப் பெரியோர்போலத்
தாரணியி லேயிருப்பார் பெரியோர்தானே. (203)

சமயக்கோள்.

தானென்ற கலைக்கியான மறிந்தாலென்ன
தற்கமொடு மாயையுற்றால் தவறிப்போகும்
வானென்ற நிராசையுற்று மாய்கைபோக்கி
மனமுருகிப் பூரணத்தி லன்புசேர்ந்து
கோனென்று யிருந்தவர்க்கித் தனையுமெய்துங்
குவலயத்தி லறுசமயக் குருடர்கேட்டார்
தேனென்ற சிவபூஜை சத்திபூஜை
தெரிந்தவனே சிவயோகி சித்தனமே. (204)

இந்நூலுக்கு வேண்டிய நூல் பெயர்.

ஆமென்ற சித்தருக்கு மிந்நூல்வேணும்
அப்பனே பூஜையிரு நூறும்வேணும்
தாமென்ற தீட்சையிரு நூறும்வேணுஞ்
சாதகமாம் ஞானத்தில் நூறும்வேணும்
ஏனென்ற வாதமிரு நூறும்வேணும்
இயல்பான கொங்கணரைஞ் ஞூறும்வேணும்
வாமென்ற சார்வுக்குச் சட்டநாதர்
வைத்தாரே வெளியாக வாதந்தானே. (205)

கல்வி யோழுக்கம்.

வெளியாகச் சொல்லுவரோ வேதசாலும்
வேதாந்தி யானுக்கா லடக்கம்வேணும்
களியாக வுலகத்தே கருவைச்சொன்னால்
கழுதையவன் கரையேற மாட்டான்போபோ
சுளிவாக மனதுள்ளே யடக்கமானல்
சுருதியாஞ் சித்திக்குஞ் சித்தனுவான்
தெளிவாகப் பேசுவதார் சித்தர்பேசார்
திறப்பதார் செடமழிந்த ஞானிதானே. (206)

ஏகபாத விளக்கம்.

ஞானமென்ன யோகமென்ன இரண்டுமொன்று
நலமறியா மாடுகடான் வெவ்வேறென்பார்
பானமென்ன வமுர்தமென்ன இரண்டுமொன்று
பண்பரியாப் பாவிகடான் சுத்தமென்பார்
மானமென்ன ஈனமென்ன ரவிமதிதானென்ன
வையமென்ன வானமென்ன ஆண்பெண்ணென்ன
கானமென்ன வுலகமென்ன சாதியென்ன
கருதிப்பா ரொன்றுகுங் காணுங்காணே. (207)

சிவயோகம்-பூசைபலன்.

காணுகின்ற தர்மமது செய்வாராகில்
காசினியி லவர்க்குமவர் பிதிர்க்குமாகும்
தோணவே பாவத்தைச் செய்வானுகில்
சொன்னவற்கா மல்லாட்டால் சுற்றத்தார்க்காம்
ஊணவே சிவயோகஞ் செய்வானுகில்
உயிரதுதான் மோக்ஷமெய்து முண்மையுண்மை
பூணவே பூசைசெய்தால் சிவத்துக்காகும்
பூசையென்ன மனங்கனிந்தால் புகழுமாச்சே. (208)

அன்பிலார் ஞானக்குறி.

ஆச்சப்பா கனிவல்லோ பூரணந்தான்
அரகரா மனமுருக வருமைமெத்த
காச்சப்பா நின்றதொரு கன்னெஞ்சார்க்கு
காயசித்தி ஞானசித்தி கடினமாகும்.

பூச்சப்பா ஞானிகடான் பூலோகத்தில்
பூரணமே தெய்வமென்பான் பூசையென்பான்
பேச்சப்பா மெத்தவுந்தான் படித்துச்சொல்வான்
பேசாமல் மனமுருகாப் பெரியமாடே, [209]

உலகாதியந்த முடிவறிதல்.

பெருமையென்ன வாழ்வென்ன கீர்த்தியென்ன
பேச்சென்ன மகிழ்ச்சியென்ன பிதிர்க்களென்ன
அருமையென்ன சுகமென்ன கோவிற்குளமென்ன
அதீதமென்ன அரகரா சிவாயமென்ன
உரிமையென்ன வுறவென்ன சங்கற்பமென்ன
வுலுத்தமென்ன ஈவென்ன கற்பமென்ன
கருமையென்ன செம்மையென்ன கல்வியென்ன
காசினியில் நரகமென்ன சொர்க்கமென்ன. (210)

என்னவே குருவென்ன சீடனென்ன
இயல்பென்ன இயல்புகெட்டுப் போனதென்ன
வன்னமிகுஞ் சாதியென்ன நீச்சமென்ன
மாய்கையென்ன கற்பமென்ன அழிவதென்ன
பொன்னென்ன மனமென்ன சீர்தானென்ன
பொல்லாத தாயென்ன பிறப்பதென்ன
முன்னென்ன பின்னென்ன முறைதானென்ன
முடிவறிந்தோன் சிவயோகி மூர்த்தியாமே. (211)

மூர்த்தியென்று முத்தியென்று மிரண்டுஞ்சொல்வார்
முக்யமென்பார் சிலதெல்லா மூடர்மூடர்
ஆர்த்தியென்ற பூரணத்தா னல்லாதுண்டோ
அதிற்பிறந்த தைந்துவகை யல்லாதுண்டோ
கீர்த்தியென்ற வகையறிந்து சித்தரானார்
கிலேசமில்லா ஞானியென்று சிலபேரானார்
தீர்த்தியென்ற ரிஷியோடு முனிவரானார்
சிவயோகி யென்றதிரு நாமந்தானே. (212)

ஒடுக்கமுணர் வறிதல்.

திருவுடைய நாமமென்ன சிவயோகந்தான்
    செகத்திலுள்ளோர் செய்வதொன்றுஞ் செம்மையல்ல
அருவுடைய தாயினுட ஆட்டுஆட்டு
    ஆதியென்ற சிவனாட்டு ஐவராட்டு
கருவுடையோ ரறிந்துகொள்ளு மீதல்லாமற்
    காசினியோர் சொல்வதிலே கதையொன்றில்லே
மருவுடைய பூவினுட வாசம்போல
    மனமுருகிப் பூரணத்தில் மாளுமாளே. (213)

ஆதிவஸ்து அனாதிவஸ்து.

மாளாம லாண்டிருந்தால் யோகியாச்சு
    மார்க்கமந்தப் படிதானே மெய்ஞ்ஞானிக்கும்
ஆளாம லாண்டிருப்பா ரரனுந்தாயும்
    ஆதிவஸ்து அனாதிவஸ்து ரெண்டுந்தானும்
கேளாமற் கேட்டிருப்பார் நடனவோசை
    கிரிகையென்ற மனமங்கே புக்கிப்போகும்
வாழான வாழ்வுசிவ யோகவாழ்க்கை
    மற்றதெல்லா மாய்கையென்ற வாழ்க்கையாமே. (214)

நூலின்தோகை வகையின்பம்.

ஆமிந்த இருநூற்றுப் ட்தினாறுக்குள்
    அடக்கிவைத்த பொருளெல்லாம்வெளியாய்ச்சொன்னேன்
ஓமிந்த வுலகத்தி லிந்நூல்கிட்டில்
    உலகத்திற் சித்ததிக முண்டாய்ப்போச்சு
தாமிந்த சூத்திரத்தைக் கெணியாதியந்தால்
    தலேதெறித்துப் போகுமடா சத்தியஞ்சொன்னேன்
நாமிந்தப் படிசொன்ன யோகிக்கீய்வாய்
    நலமான பூரணசூஸ் திரந்தான்முற்றே. (215)

அகஸ்தியர் பூரண சூஸ்திரம் 216

முற்றிற்று.